போர்வாள்

ரள் 4]　2-12-50　[வீச்சு 14

கசக்கிப் பிழியப் படுகிறான் கைத்தறி நெசவாளி !



கவலையற்று வாழ்கின்றனர் டில்லி ஆளவந்தார்கள் !

சிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A. (HONS)

விலை 2 அ

Best copy available.

உண்மைக்கு மாறாகப் பேசுகின்றனர் ஊராளவந்தவர்கள்!

சென்னை ஆட்சியாளர்கள் செய்கின்றனர் பெருந்தவறு!

அன்பர் ஆசைத்தம்பி அறிக்கை

தோழர்கள் "தனியரசு" ஆசிரியர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கலியபெருமாள், தங்கவேலர் ஆகியோரை ஆட்சியாளர்கள் அர்த்தமற்ற முறையில் வெஞ்சிறைக்குள் தள்ளி வாட்டி வதைத்தபோது, அவர்களின் தலையை மொட்டை யடித்துத் தமக்கு நீங்காப் பழியைத் தேடிக்கொண்டனர் திருச்சிச் சிறை அதிகாரிகள். இது நடந்தது 22-7-50ல். ஆனால் 4 மாத காலத்திற்குப் பிறகு, 22-11-50 அன்று, ஆட்சியாளர்கள் ஓர் அறிக்கை பிறப்பித்தனர் அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை என்பதாக! ஆட்சியாளரின் அறிக்கை எவ்வளவு ஆதாரமானது என்பதைத் தண்பர் ஆசைத்தம்பியின் கீழ்க்கண்ட அறிக்கை ஆணித்தரமாக விளக்குகிறது:—

"சிறைச்சாலை அதிகாரிகள் என் தலையை மொட்டை யடிக்கவில்லை என்றும், என் தலைமயிர் விஷயத்தில் சிறை அதிகாரிகள் எவ்விதத்திலும் தலையிடவில்லையென்றும், சென்னைசர்க்கார் விளம்பர இலாகா ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பதைப் பார்த்ததும் ஜெர்மன் தேசத்து கோயபள்ஸ் நினைவு தான் எனக்கு வந்தது.

"திருச்சி மத்திய சிறை அதிகாரிகளால் 'குவாரன்டைன்' பகுதியில், மனித உணர்ச்சியோடு எவ்வளவோ தயவாகக் கேட்டும், பயனின்றி மிருகத் தன்மையிலே என்னுடைய நண்பர்களான கலியபெருமாள், தங்கவேல் ஆகியவர்களுடைய "தலைமயிர்" 27-7-50ல் பறிக்கப்பட்ட பின்பு எங்கள் சாதாரண தலைமயிரை தங்கம் வெள்ளி என்ற கருத்தில் கவலையோடு சிறை அதிகாரிகளை விசாரித்து 22-11-50-ல் சென்னை சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருப்பதற்கு நாங்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்கள் என்றாலும், சென்னை சர்க்காரின் பித்தலாட்டமான போக்கைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. எங்களை மொட்டை யடிக்கவில்லை என்று கூறுகிற சர்க்கார் நாளை ஆசைத்தம்பி என்ற நபர் சிறையிலேயே இருக்கவில்லை என்று அறிக்கை விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

"ஏனெனில் என்னையும் என் நண்பர்களையும் மொட்டை யடித்த சிறை அதிகாரிகள் இன்னும் செத்துவிடவில்லை. எங்களை மொட்டையடிக்கும்போது பல தோழர்கள் (கைதிகள்) எங்களோடு இருந்தார்கள். சர்க்கார் நேர்மையான விசாரணை நடத்தத் தயாராய் இருந்தால், நாங்கள் திருச்சி சிறையில் மொட்டையடிக்கப்பட்டோம் என்பதை நிரூபிக்கிறோம். எனவே சென்னை சர்க்கார் தங்கள் அறிக்கையில் உள்ள தவறை உடனே திருத்திக்கொள்ளும் என்று நம்புகிறேன்."

புதிய ஏஜெண்டுகள் தேவை
"மக்கள் மணி"

தி. மு. வார இதழ்

தனி இதழ் விலை அணா 1.

முன்பணம் கட்டக் கூடிய ஏஜெண்டுகள் உடனே தேவை.

நிர்வாகி
"மக்கள் மணி"
84, பிடாரியார் கோவில் தெரு,
சென்னை 1.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டங்கள்

நடக்க இருப்பவை

2-12-50 சனிக்கிழமை

வையம்பட்டி :—சந்தைப் பேட்டை சமீபத்தில் மாலை 4 மணிக்குக் கூட்டம் தலைவர் சா. சமுத்திர பாண்டியன் பேச்சாளர்கள் :—தஞ்சை ஏ. கே. வேலன், பணப்பாறை மு. தங்கநாயகம்.

வாலாஜா பேட்டை :—மாலை 6 மணி. பேச்சாளர்கள் க. அப்பாதுரை எம். ஏ. எல். டி., என். வி. நடராசன், ஆர். நடராசன்.

3-12-50 ஞாயிற்றுக்கிழமை

நாகை :—மாலை 6-மணி. பேச்சாளர்கள்: எம். எஸ். இராமசாமி, இரா. சு. தங்கப்பழம், டி. ஆர். சுப்ரமண்யம், ஆ. திராவிடமணி.

திண்டுக்கல் :—மாலை 6-மணி பேச்சாளர்கள்:— ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு, என். முத்து இடம் :—மாரியம்மன் திடல்.

4-12-50 திங்கள்

சங்கரநயினார்கோயில் :—மாணவர் கிளை திறப்பு விழா. பேச்சாளர் : எம். எஸ். இராமசாமி, இரா. சு. தங்கப்பழம், டி. ஆர். சுப்ரமண்யம், ஆ. திராவிடமணி.

8-12-50 வெள்ளிக்கிழமை

அய்யம்பேட்டை (காஞ்சி) :—சி. என். அண்ணாதுரை எம். ஏ. தில்லை வில்லாளன் பி. ஏ. ஆனர்ஸ், இராம அரங்கண்ணல்.

10-12-50 ஞாயிற்றுக்கிழமை

மதுராந்தகம் :—மாலை 6-மணிக்கு காந்தி மண்டபத்தில் கூட்டம். பேச்சாளர் : சி. என். அண்ணாதுரை எம். ஏ.

Editor, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at the Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon)

சிறை வாழ்வு — ஒரு தொடர்கதை

—:[தில்லை அறிவழகன்]:—

அன்று இரவு பேசும் படம் ஒன்றைப்பார்த்துவிட்டு, தியேட்டரை விட்டு வெளியேவந்தேன். பேசும் பட உலகிலே சிலபடங்கள் சினிமாவைப் பார்க்கும் ஆசையையே அழித்து விடுகின்றன அல்லவா, அத்தகைய படங்களிலே ஒன்றுதான் அன்று நான் பார்த்தது. 'விட்டது தொல்லை' என்பதுதான் அன்று படம் முடிந்து வெளிவந்துகொண்டிருந்தவர்களின் விமர்சனம். என் விமர்சனமும் அதுவேதான்.

வெளியே வந்தேனோ இல்லையோ, எதிரே ஒரு பிச்சைக்காரன்! குழிவிழுந்த கண்கள்! சுருங்கி ஒட்டிய கன்னங்கள்! தள்ளாடுங் கால்கள்! கூனிய உடலைத் தாங்காதாடும் கையில் பிடித்திருக்கும் மெல்லிய கழி! வறுமையோடு வளர்ந்தாலும் வளத்தோடு வாழ்ந்து நிமிர்ந்து நிற்கும் வெள்ளிய செம்பட்டை மயிர்கள்! பணம் அத்தனையும் இழந்த பின்னும் இணைபிரியாமலிருக்கும் பசியைப் போன்று பற்கள் அத்தனையும் உதிர்ந்த பின்னும் இணைபிரியாமலிருந்து ஒன்றோடொன்று போராடும்ஈர்கள்!.........

இந் நிலையில் வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தையும் புரட்டிவிட வேண்டும் என்று போராடும் பிச்சைக்காரன் அவன்!

"........சார்!...ஒரு காலணா... உங்களுக்கு.......ஒரு வெற்றிலை ...எனக்கு ஒரு கவளம் சோறு"

—இவைகள் நாம் கேட்டுக் கேட்டு அலுத்துப்போன வறண்ட வார்த்தைகள்!

நெகிழ்ந்த நெஞ்சில் கிளம்பி, வளைந்த தொண்டை வழியே வந்து, உணர்வற்ற நாக்கை வளைத்து, ஒலி செய்யப்படும்—பிறருக்கு, 'ஓயாத தொல்லை' தரும் ஒரு வார்த்தைக் கூட்டம் ஆனால்.........?

வற்றாத பண ஊற்றுக்கள், வளையாத கோல் பிடித்தோர், 'வருத்தம்' என்பதையே அறியாமல் போகபோக்கியத்திலே புரண்டோர், வானமளாவிய மாளிகைகளில் வில்வெட் மெத்தையில் வேல்விழியாரின் குளிமையிலே மயங்கி யிருந்தோர், இவர்களை மாத்திரமல்ல, இவர்கட்கு வால்பிடித்தோர் வாழ்க்கையையும் கூட வறண்ட பாலைவனமாக ஆக்கியுள்ளன 'கேவலம்' அந்தச் சொற்கள்!

அப் பிச்சைக்காரனைக் கண்டும் காணாததுபோல் நடந்து, தங்கள் கார்களில் ஏறியமர்ந்த கனதனவான்களைக் கண்ட போது என் மனத்திரையில் பட்டுத் தெறிந்தது இந்த வரலாறு!

ஆனால், நான் யார்?............... வேதாந்திகள், இதைப் பற்றித்தான் சிந்திக்கவேண்டும், சிந்திப்பதுதான் போகிற வழிக்குப் புண்ணியம் என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்கு இதைப் பற்றிச் சிந்திக்கவே நேரம் இருந்ததில்லை.

ஒன்று மாத்திரம் நிச்சயம்! நான் பிச்சைக்காரனல்ல!

பிச்சைக்காரனாக இருக்க என்னுடைய மனம்—அதைவிட முக்கியமாக என்னுடைய மனைவி மக்களுடைய பண்பாடு, இடம் தரவில்லை, இன்று வரை.

கோமள வல்லிகளின் கொவ்வை இதழ்ப்புன்முறுவல்களல்ல இந்த எண்ணங்கள், மின்னல் போன்று தோன்றி மறைய! இதயம் எனும் உலைக் கூடத்திலே வடித்தெடுக்கப்பட்டு, என் வாழ்க்கையை வாட்டி வதைக்கும் ஈட்டிகளாகும்!

ஆனால் இவைகளிடமிருந்து விடுபடலாம் என்று எண்ணியல்ல அன்று 'சினிமாவிற்கு'ச் சென்றது. சென்னையில் தங்க இடம் ஏதும் இல்லை. ஆகவேதான் சினிமாவிற்குச் சென்றேன்! சென்றேன்! ஆனால், 'ஏன் பார்த்தோம்?' என்ற நிலையில் வெளியே வந்தேன்.

பஸ் ஏற, போராட்டம் ஆரம்பித்தது. அங்கே நின்றுகொண்டிருந்தவர்களில் ஒரு சிலர்தான் ஏற முடிந்தது.

'ஆமாம்! அதோ வருகிறதே அதுதான் கடைசி பஸ். அதிலே இடம் பெறாவிடில் நிச்சயம் புகை வண்டியைப் பிடிக்கமுடியாது.' என்ற முன்யோசனை தோன்றியவுடனே முன் ஆயத்தமானேன் பஸ்ஸில் ஏற.

பஸ்ஸின் கம்பியை, அக் கூட்டத்திற்கிடையேயும் எப்படியோ பிடித்துவிட்டேன்.

'இந்த பஸ் சக்கரத்தில் காத்தில்லை. ஷெட்டுக்குப் போகிறது. எல்லோரும் இறங்குங்கோ என்று ஒரு பெரிய போடு போட்டான் 'கண்டக்டர்!'

யாரும் இறங்குவதாகக் காணோம், 'இறங்கய்யா' என்று தன் அதிகார தொனியோடு கோபத்தையும் கலந்து சொன்னான்.

கேட்டுப் பழக்கமானதுதானே! ஒருவரும் இறங்கவில்லை

'அடுத்த பஸ் இன்னும் இரண்டு நிமிஷத்தில் வந்துவிடும் அதில் வாருங்கள்' என்றான்.

உடனே அனைவரும் ஏறியதைவிட வேகமாக இறங்கினர், எங்கே வருகிற பஸ் தவறிவிடப் போகிறதோ என்ற அச்சத்தில்!

தீப அலங்கார தரிசனத்துக்காகக் கோயிலில் பக்தர்கள் காத்திருப்பதுபோல, அனைவரும் பயபக்தியுடன் பஸ் வரும் திசை நோக்கிக் கைகட்டி நின்றனர். நானும் நின்றேன்.

அன்று முழுதும் நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் என் மன அலையில் வந்து மோதின.

''இந்த பாங்க் மேனேஜர்களுக்கே ஒரு சிறிதும் இரக்கமே இருக்காதா? போனவுடனேயே 'உம்முடைய அப்ளிகேஷன் லேட்! வேறொருவரை நியமித்தாகிவிட்டது' என்று கூறுகிறானே. நம் நிலையை ஒரு சிறிதாவது யோசிக்கிறானா?......... இனி சென்னையில் வேலைகிடைக்கும் என்று நம்பியே வரக்கூடாது, இங்கு வருவதற்கு வீணாகச்செலவழித்த பணத்தைப் பிள்ளையின் பள்ளி சம்பளத்திற்குக் கட்டியிருந்தால் அவன் பெயராவது பள்ளியில் அடிபடாமல் இருக்குமே........."

இந்த சிந்தனை ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த நான் ஏதோ சத்தங்கேட்டு திடீரென்று விழித்துக் கொண்டேன். ஓரிருவர்தான் துணிவோடு நின்றுகொண்டிருந்தார்கள்.

'சார், சார், 'எக்மோருக்கு நாலணா! நாலணாதான் சார்'

என்று தன்னுடைய தொண்டை புண்ணாகும்படி இடைவிடாமல் கத்திக் கொண்டிருந்தான் ஒரு ரிக்ஷாவாலா.

அவனருகில் ஒரு பெண், இல்லை, தோலுடன் போராடும் எலும்புடைய ஒருடல் நின்றுகொண்டு குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தது. இல்லை! இல்லை! ஒரு சிறு எலும்புக்கூடு, மற்றோர் பெரிய எலும்புக் கூட்டிலுள்ள தோலைச் சுவைத்துக் கொண்டிருந்தது. ஒரு ஐந்து வயது பையன் சகிக்க முடியாத உருவத்தோடு குற்றுயிராய்க் கிடந்தான். அவன் கட்டியிருந்த முழத்துண்டு கிழிந்து அழுக்காகி நாறிக் கொண்டிருந்தது.

இந்தக் காட்சிக்குப் பக்கத்திலேதான் பட்டேல் ஹோட்டல்! உடையின்மடிப்புக்கலையாத சில மைனர்கள், தங்கள் காரிலிருந்து இறங்கி உள்ளே சென்று 'ஐஸ்கிரீம்' சாப்பிட்டுவிட்டு, வெளியில் வந்து சில்லரைக் கடையில் 'சிஸர்ஸ்' வாங்கிப் பற்றவைத்தனர்.

அந்த எலும்புருவான பெண் ஓடிச் சென்று, 'ஐயா காசு! காலணா போடுங்கோ, இந்த பிள்ளையைப் பாருங்களேன். துடிக்குது! பால் வாங்கிக் கொடுக்கணுங்கோ!'' என்றாள்.

'பால் உனக்கு காலணாவுக்கு கொடுக்கிறார்களா?' என்று சில்க் சட்டைகளில் ஒன்று கூறிக்கொண்டே காரில் ஏறி உட்கார்ந்தது. 'வர வர பிச்சைக்காரர் தொல்லை மிக அதிகமாகிவிட்டது' என்று கூறி சிரித்துக் கொண்டே காரில் உட்கார்ந்தனர், மற்ற மைனர்களும். கார் பறந்தது.

அந்தப் பெண் திரும்பினாள்.

நான் ரிக்ஷாக்காரனைப் பார்த்தேன்.

அவன் அந்த நோயாளிக் குழந்தையைப் பார்த்தான்.

சிறிது தயங்கினேன்.

'நாலணாதான்' என்றான்!

பஸ் வரும் திசை நோக்கினேன். அறிகுறி ஒன்றும் காணப்படவில்லை.

'பின் கொடுக்கிறதை கொடுங்கோ! ஏறுங்க' என்றான். ஏறிவிட்டேன்.

'போயிட்டு சீக்கிரமே வந்துடறேன் வீரம்மா! சுந்தரத்தையும், குழந்தையையும், பார்த்துக்கோ.'

அவள் கண்கள் குளமாயின. அவன் கண்கள், இரு சொட்டு கண்ணீரை, வண்ட—ஈவு இரக்கமற்ற—அவன் காலைத் தேய்க்கின்ற தார் ரோட்டில் சிந்தின.

குழந்தை 'வீர்' என்று கத்த ஆரம்பித்தது. அணைத்துக் கொண்டாள். அவள் மார் பெலும்பு குழந்தையின் உடல் எலும்போடு போராடிற்றா? அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லையானால், அக் குழந்தை அவ்வளவு அலறியிருக்காதே! சிறுவன் பெயர் சுந்தரம்! சுந்தரம், பாவம், அவன் பெயரும் உடலும் இருதுருவங்கள்! திடீரென்று அச் சிறுவன் இருமினான் அப்போது அவனுடைய இருதயமே பிளந்துவிடுமோ என்று அஞ்சினேன். அவ்வளவு பயங்கரமான இருமல்!

'ஓ...சென்னை மக்களே! உங்கள் அகராதியில் இரக்கமே கிடையாதா? அல்லது சென்னையின் சர்வசாதாரண காட்சி இதுதானா? புதிதாக சென்னை வந்துள்ள என்னை மாத்திரம்தான் இக்காட்சிகள் புண்படுத்துகின்றனவா?'

'ஏ சென்னையே! நீ பகலெல்லாம் ஓ, ஆ, உர் என்று அலறித் துடிக்கிறாய்! ஒன்பது மணியானாலோ மடிந்தேவிடுகிறாய்'

இப்படியெல்லாம் பல எண்ணங்கள், என் மன மாளிகையில் உலவலாயின. அந்த அமைதியான இரவில், கொஞ்சமும் சப்தமின்றி ரிக்ஷா ஓடிக்கொண்டிருந்தது.

'ஏனப்பா, நீ, பரம்பரையாய் ரிக்ஷா இழுக்கிறாயோ?' என்று

ஒரு கேள்வியைப் போட்டேன், பேசுவதற்கு வேறு விஷயம் ஒன்றுமில்லாததால்!

‘என்ன அப்படி சொல்லிட்டிங்க’ என்று சொன்னவன் பின் பேசவில்லை.

ரிக்ஷா, எழும்பூரை அடைந்தது.

‘என்னா அண்ணே! இன்னும் ‘ஒன்பதரை’ போவலல்ல?’ என்று எதிரே வந்த ரிக்ஷா வாலாவைக் கேட்டான், இவன்.

‘இப்பதான் போச்சு அண்ணே, ஐந்து நிமிஷம் இருக்கும்!’ என்று அவன் பதில் சொன்னான்.

‘சரி, இனி என்ன செய்வது? பதினோரு மணி வண்டி வரையில் காத்திருக்க வேண்டியதுதான்! இந்தா காசு’ என்று சொல்லி, சட்டைப் பையிலிருந்து சில்லறையை எடுத்துக் கொண்டே, நிலையத்தின் படியில் உட்கார்ந்தேன்.

‘காசுக்கென்னங்க அவசரம். அதுகிடக்கட்டுங்க. என்னை, பரம்பரையா இழுக்கிறவனா என்று கேட்டிங்களே, ஏன் சாமி?’ என்றான்.

‘சும்மாதான் கேட்டேன்’ என்றேன்.

‘அதற்கில்லீங்க சாமி! நான் படிச்சவன்க! என் குலத்திலே இப்படி எவனும் ‘ரிக்ஷா’ இழுத்தாண்ணு நான் கேள்வி கூட பட்டதில்லிங்கே. எங்கப்பா......சர்க்கார் குமாஸ்தா வேலை பார்த்தவருங்க’ என்றான்.

“அப்படியா! பின் நீ ஏன் இந்த பாழும் வேலை பார்க்கிற?”

அவன் விம்மினான். முகத்தைக் கையால் மறைத்துக் கொண்டான்.

‘உங்களை நான் எங்கேயோ பார்த்ததுபோலிருக்கிறது’ என்றான் நீர்வழியும் கண்களோடு.

ஒன்றும் புரியாமல் திகைத்தேன்.

‘அதற்கல்ல. என் ‘வாழ்க்கை’யை உங்களிடம் கூறினால் என் மனம் சாந்தியடையும் போலிருக்கிறது......’

“அதறகென்னகூறு நானும் உன்னைப்போல், ரிக்ஷா இழுக்கவில்லையே தவிர ஏழைதான்! ஆனால் இரக்கத்தில் ஏழையல்ல. உன்னைப்போன்ற ஏழைகளின் ‘வாழ்வு’ தான் இந் நாட்டின் இலக்கியமாக இருக்கவேண்டும், அப்பொழுதுதான் நாடு திருந்தும் என்று எண்ணுபவன் நான். ஆகவே சொல். அமைதியோடு சொல்! பொறுமையோடுசொல்! ஆத்திரத்தோடு சொல்! உலகத்தைப் பார்த்துச் சிரித்துச் சொல்!”

அவன் உள்ளத்தில் என்றுமில்லாத புத்துணர்ச்சி பொங்கியதை அவன் கண்கள் காட்டின; அவன் சொற்கள் சொல்லின. அவன் பேசத் தொடங்கினான். பேசவா தொடங்கினான்? இல்லை! தன் வாழ்க்கை ஓவியத்தையே என்முன் தீட்டிக்காட்ட ஆரம்பித்தான்.

* * * *

என் ஊர் சிதம்பரம். இருபதாண்டிற்கு முன் என் அப்பா அங்கே முனிசிபாலிட்டி குமாஸ்தா. அவர் வாங்கின பதினைந்து ரூபாய் சம்பளம் வயிற்றைக் கழுவுவதற்குத்தான் சரியாக இருந்தது. அம்மா என்னைச் செல்வமாய் வளர்த்தார்கள்.

‘நீ நல்லா நாலு எழுத்து படித்து முன்னுக்கு வரனும். நிரையா மார்க்கு எடுக்கனும். கலெக்டர் வேலை பார்க்கனும்’ என்று எங்கம்மா சொல்வார்கள். நானும் தலையையாட்டுவேன்.

அப்பாவிற்கும் அதே எண்ணம்தான். ஆனால் என்னிடம் சொல்வதில்லை. எனக்கு இரண்டு தமக்கையும் ஒரு தங்கையும் உண்டு, வேறு தம்பியோ, அண்ணனோ இல்லை.

நான் பள்ளியில் நன்றாகப்படிக்கும் மாணவர்களில் ஒருவன். பள்ளிக்கூட இளைஞர் மன்றங்களில பேசுவேன். பாடுவேன். நடித்துங்கூட இருக்கின்றேன். பொதுவாக எனக்கு நல்ல பெயர்தான்.

பள்ளியில் கடைசியாக நடந்த நிகழ்ச்சிகளில் சிலவற்றை நான் இன்னும் மறக்கவில்லை. எட்டாவது வகுப்பிற்கு முதல்வனாகத் தேறினேன். அது என்னுடன் படித்து வந்த உயர் ஜாதிப் பையன் ஒருவனுடைய பொறாமையைக் கிள்ளிவிட்டது. அவன் ஆசிரியரின் உறவினன்

திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம்

அறிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பின்பற்றித் திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம் ஒன்று அமைக்க இயக்கப்பிரமுகர்களுடனும் பொதுச் செயலாளர் C. N. அண்ணாத்துரை அவர்களுடனும் பெண்கள் இயக்கப்பிரமுகர்களுடனும் கலந்தாலோசித்து ஏற்பாடு செய்துவருகிறோம். இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்துள்ளார்கள். தொடக்க விழாவுக்கான அமைப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் தொடக்க விழா நடைபெற விருப்பதால்; இயக்கத்தில் கலந்து தொண்டாற்ற விரும்பும் திராவிடப் பெண்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியிலிருந்து நேரிடையாகவோ ஆள்மூலமாகவோ ஆண்டுக் கட்டணமாகிய நான்கணாச் செலுத்தி உறுப்பினராகச் சேர்ந்துகொள்ளும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

அலமேலு அப்பாதுரை

தமிழ்மலை

13, அருணாசல ஆச்சாரி தெரு,
சேப்பாக்கம், திருவல்லிக்கேணி
சென்னை 5.
அமைப்பாளர்

என்பது பின்னால்தான் தெரியும்

ஒரு நாள், ஆசிரியர், வகுப்பில், பிழைபடக் கூறிய பொருள் ஒன்றைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். இதைக் கவனித்த அவன் ஆசிரியரிடம் சென்று தூபம் போட்டான். நண்பனின் கோட் சொற்களின் பிரதிபலிப்பு வகுப்பில் தெரிந்தது. அவர், ஆங்கிலம், பூகோளம், சரித்திரம் ஆகியவற்றின் ஆசிரியர். சரித்திர வகுப்புக் கேள்வி ஆரம்பமாகியது.

'அசோகன் ஆதரித்த மதம் என்ன?'

'புத்த மதம்' என்றான் மூன்வது பையன்.

'அவர் செய்த நன்மைகள்?''

'சாலை போட்டார், சத்திரம் கட்டினார்......''

என்று ஏதேதோ சொன்னான் பக்கத்துப் பையன்.

''கலிங்கத்தின் மீது போர் தொடுத்த வருடம்?''—என்னைக் கேட்டார் ஆசிரியர்.

அந்த ஆண்டு, என் நினைவிற்கு வரவில்லை. எனவே அன்று முழுதும் கால் கடுக்க பெஞ்சின்மீது நிற்கவேண்டியதாயிற்று.

கோள் மூட்டிய நண்பன், இராமு, சிரித்தான்! ஆனால் ஆங்கில வகுப்பில் கேட்டகேள்விக்கெல்லாம் பட்டென்று பதில் கொடுத்தேன்.

பூகோளம் வந்தது ஓர் நாள்! 'நைல் நதி தீரம்' அதன் முன்னான் பாடம். அதன் முன்னால் நடந்தது 'காங்கோ நதிக்காடுகள்' துருவிப் படித்துக் கொண்டு வந்திருந்தேன் இவ்விரண்டு பாடத்தையும்.

ஆனால் ஆசிரியர் கேட்டதோ மூன்று வாரம் முன் நடந்த 'சகாரா பாலைவனத்தின் வியாபார ஸ்தலம்'

'எல்லாம் தெரியும் என்ற இறுக்கா? அல்லது நீதான் மேதாவி என்ற எண்ணமா?' என்று கேட்டார் ஆசிரியர்.

'சார்! அந்தப் பெயரைப் படித்து நீண்ட நாட்களாகிறது. மறந்து விட்டது' என்றேன்.

''மடையா! என்னடா எதிர்த்துப் பேசுகிறாய்? உனக்கு எப்பொழுது இந்தத் திமிர் ஏறியது? கையை நீட்டு.''

நான் கையை நீட்டவில்லை. பிரம்பு உடலோடு பேசியது. அன்றுதான் 'கோபம் கண்ணை மறைக்கும்' என்ற பழமொழி எனக்குப் புரிந்தது.

வேகமாகத் திரும்பினேன். பாவம்! அந்தக் கழி என் இடது கண்ணைப் பதம் பார்த்து விட்டது. ஆம்! அவருடைய கோபம் என் இடது கண்ணை மறைத்து விட்டது!

கையைக் கண்ணில் புதைத்துக் கொண்டே வீடுநோக்கி நடந்தேன். அப்பாவிற்கு இரண்டு மூன்று நாட்களாகவே கடுமையான ஜுரம்! ஆகவே படுத்திருந்தார். அம்மா என் கண்களைக் கண்டவுடனே கதற ஆரம்பித்து விட்டார்கள்.

நடந்ததை விளக்கினேன். அப்பாவின் கோபம் ஆசிரியரின் ஆத்திரத்தைவிட அதிகமாக இருந்தது.

'இனி அந்தப் பள்ளிக்கு நீ போக வேண்டாம்' என்றார் அப்பா.

தரும ஆஸ்பத்திரிகள் எதற்காகத்தான் இருக்கின்றன? அரைகுறையாகப் பார்க்கக் கூடியதாக இருந்த என் கண்ணை முழுக் குருடாகவே ஆக்கித் தந்தது உள்ளூர் தர்ம ஆஸ்பத்திரி.

தந்தையின் வியாதி குறையவில்லை. மாறாக அதிகமாகியது! படுத்த படுக்கையாகவே இருந்தார்.

'இராமசாமி' என்று கூப்பிட்டார் ஒருநாள். அருகே சென்றேன்.

'நீதான்...இனி...இந்த குடும்பத்தை...காபாத்தனும்...நாளையிலிருந்து பள்ளிக்குப்போ. இந்த வருஷம் படித்துவிட்டு அடுத்த வருஷம் வேலைபார்' என்றார்.

அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்பது அப்பொழுது எனக்கு விளங்கவில்லை.

நடுநிசியின் பிண அமைதியைக் கலைத்துக் கொண்டு கோவில் மணி பன்னிரண்டு அடித்தது!

உயிரோடு போராடிக்கொண்டிருந்தார் அப்பா! அம்மா அழ ஆரம்பித்து விட்டார்கள்.

அக்காவும் நானும் வேகமாக ஓடினோம், டாக்டர் வீட்டுக்கு! கதவைத் தட்டினோம். 'டாக்டர்

(17-ம் பக்கம் பார்க்க)

"மாலை மணி" (திராவிடர் தமிழ் தினசரி)

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட "மாலை மணி" 1-12-50 முதல் தொடர்ந்து வெளிவரும் என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஏஜண்டுகள் தங்கள் தேவையை தெரிவிக்கவும். ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

"மாலைமணி" அலுவலகம்

ADVT. மண்ணடி சென்னை 1.

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குள் டாக்டருக்கே சந்தேகம் போலும்! எழுந்திருந்து நடக்கச் சென்னார் நடந்தேன்.

"எங்காவது உடம்பில் வலிக்கிறதா"

"உடல் முழுதும்தான் வலிக்கிறதே" என்றேன்.

"எனக்கும்தான்" இது இன்ஸ்பெக்டரின் பதில்.

கைகளில் விலங்குகள்! இரு பக்கமும் போலீஸார். நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள் என்பதை, பின்னால் தான் தெரிந்து கொண்டேன்.

என்னால் நிமிர முடியவில்லை! எப்படி முடியும்? குற்றமில்லாத, குற்றம் செய்யாத, செய்யத்தெரியாத, செய்யவும் எண்ணாத என்னை, சென்னையில், நடுத்தெருவில், நூற்றுக்கணக்கானவர் கேலியாகப் பேச, குற்றம் செய்தவனாக ஆக்கப்பட்டு, அழைத்துச் செல்லப்படுகிறேன் என்று நினைத்தபோது, என் உள்ளம் புழுங்கி விட்டது.

ஆம்! பிறர் பொருளை நயவஞ்சகத்தால் சிலர் திருடி வாழ்கின்றனர் என்பதை எண்ணிக் கொதித்த என் உள்ளம் அன்று புழுங்கி விட்டது "காண வேண்டும், காணவேண்டும்! வாழ்க்கையில் ஒரு முறையாவது சென்னையைக் காணவேண்டும்!" என்று துடித்த என் கண்கள் சென்னையை அன்று நிமிர்ந்து நோக்கவும் மறுத்துவிட்டன.

'திரும்பி நடா'—அதிகார போதையில் அலறினான் பக்கத்தில் நடந்த போலீஸ் நிமிர்ந்து நோக்கினேன். திரும்பி செல்ல வேண்டிய தெரு! திரும்பினேன்!

கிழிந்து அழுக்கேறிய மேலாடை......வெளுத்த முகம்...... துன்பத்தால் துடித்திடும் கண்கள்......இந்தப் பயங்கரக் காட்சியோடு மூன்று பெண் உருவங்கள், தெருவின் ஓரமாகத் தள்ளாடி வரக் கண்டேன்.

ஆம்! அவர்கள் எந்தன் சகோதரிகள்தான்! என்னை ஓடோடி வந்து கட்டிக்கொண்டார்கள். ஏதேதோ அலறித்துடித்துக் கேட்டார்கள். 'ஏன் அண்ணா, திருடி விட்டாயா?' என்றும் கேட்டுவிட்டாள் என்னருமைத் தங்கை. 'கோ' வென்று அழுது விட்டேன்.

பக்கத்திலே இருப்பவர் போலீஸ்காரர் என்பதற்குத்தான் பொருள் என்ன?

பிடித்து இழுத்துத் தள்ளினர் என் தங்கை தமக்கைகளை! என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தனர். சகோதரிகள் பின் தொடர்ந்தனர்.

என் கைவிலங்குகள் சிரித்தன! சார்! இந்தப் போலீஸாருக்கு இரக்கமென்ற ஒரு பொருளே இருக்காதா? அல்லது அவர்கள் வாங்கும் கூலிக்கு 'அன்பு, இரக்கம்' இவற்றை விற்று விடுகிறார்களா?

இதுவரை உட்கார்ந்தபடியே, இவ்வளவு நிகழ்ச்சிகளையும் கூறி வந்த — அந்த 'ரிக்ஷாவாலா' எழுந்து நின்றான்! — நின்றபடியே மேலும் பேசலானான் :—

கண்கள் குளமாக, முகம் சிவப்பேற, உதடு உலற, பசியால் துடித்திடும் சிசுக்களைப் போல என் தமக்கைகள் அலறிய அலறல் அந்த போலீஸாரின் காதில் விழுந்திருந்தால் என்னை, என் சகோதரிகளோடு ஒரு வார்த்தை பேச அனுமதித்திருக்க மாட்டார்களா?

—ஆத்திரம் கக்க இவ்வார்த்தைகளைச் சொல்லிய அவன் வெதும்பினான். குரல் கரகரத்தது.—மேலும் சொன்னான்.

சார்! அந்தக் காட்சி என் கண்ணிலிருந்து இன்னும் மறையவில்லை. என் உயிர் போகிற வரையில் மறையாது........

—அவன் கண்களிலிருந்து நீர்த் துளிகள் வழிந்தோடப் பேசினான்—

......என் அன்பின் உருவங்கள்—அவர்கள்—எங்கு சென்றார்களோ? என்ன ஆனார்களோ?

அன்பே உருவான உலகம் என்கிறார்களே, இந்த உலகத்தில் வாழ்வதற்கு வகையில்லை மூன்று பெண்களுக்கு.

எத்தனைப் பணத்திமிர் ஏறியகயவர்களின் காலடியில் அவர்கள் கற்பு சிதைக்கப்பட்டதோ? சீரழிந்து போயினரோ? வியாதிக்காட்பட்டு வீழ்ந்தனரோ? வறுமை அவர்களை அணு அணுவாக எல்வாறெல்லாம் சிதைத்ததோ? ஐயோ......

—முகத்தை முழங்கால்களுக் கிடையில் புதைதது்கொண்டு சொன்னான்—

அன்று அவர்கள் என் அவலக்காட்சியைக் கண்டு, துடித்த உளளத்தினராய், இனி உயிருடன் வாழ்வுதெங்கே என்று எண்ணி கூவம் நதியிலோ, கடலிலோ வீழ்ந்து இறந்திருந்தால் ....?

தாயையோ, அன்றே இழந்தேன். ஆனால் இவர்கள் ஏன் என் கண்ணில் மறுபடியும் அன்று பட்டார்கள்? அவர்களின் அவலக் காட்சியைக் கண்ட பின்பும், அவர்களோடு சகோதரனாக, ஆண் மகனாகப் பிறந்து அவர்களுடைய மானத்தை, உயிரைக்காக்காத நான் ஏன் இன்னும் வாழ்கிறேன்?

சார்!......நான் ஏதாவதொரு குளத்தைக் கண்டால் 'தம்பி! தம்பி!' என்று என்னை அன்பொழுக அழைத்த என் அரும் சகோதரிகளின் நினைப்பு என் உடலில் புலியெனப் பாய்ந்து கடிக்கிறது.

என் மகள் அலறுகிறபோதெல்லாம் "அண்ணா! அண்ணா!" என்றழைத்து என்னோடேயே சுற்றும் என் செல்வத் தங்கையின் நினைவு செந்தேளெனக் கொட்டுகிறது.

இன்னும் உண்மையாகச் சொல்லப்போனால் என் ரிக்ஷா

வில் எந்தப் பெண் ஏறினாலும், என் சகோதரிகளின் பேயுருவம் தான், என்னைத் துண்டக்க இப்படி இழுக்கச் செய்கிறதோ என்று எண்ணுவேன், அது போலவே, என் அன்னையின் எண்ணம் தோன்றி என் மனத்தைச் சுட்டெரிக்கிறது, என் மகள் 'அம்மா' என்று கதறிய பொழுதெல்லாம்............... இவை இருக்கட்டும்.

'சிறை வாழ்வு' என் சிந்தனைக்கு வேலை தந்தது, நீதிமன்றம் என் உள்ளத்தைத் திருடனாக்கி விட்டது வேளா வேளையில் கூழாவது குடிக்கத் தரும் சிறை வாழ்வு பல நேரங்களில் என்னை இரக்கமிலாக் கொடியவனாக ஆக்க முயன்றிருக்கிறது.

ஆனால் ஏனோ இன்னும் என் பிள்ளை குட்டிகள் மீது இருக்கும் பாசம் விடவில்லை.

சிறையிலுள்ள இரும்புக் கம்பிகளை உழைப்பினால் உடைத்து எரித்து விடலாம் சில நேரங்களில். ஆனால் வெளியுலகத்திலுள்ள வறுமைக்கம்பிகளை உடல் துரும்பாக, நெக்குருக உழைத்தாலும் உடைக்கமுடியாது!.... ....உடைக்கமுடியவில்லை!.........என்று வீரமும் விவேகமும் ததும்ப கூறிக்கொண்டே வந்த ரிக்ஷாவாலா என் கண்ணீரை, தேம்பலை, கண்டு விட்டான். 'நானல்லவா அழ வேண்டும்.......நீங்கள் ஏன்.....'' என்றான்.

உடனே அவனை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டேன்.

"நான்தான்....உன்னுடன்..... எட்டாவது வகுப்பில் படித்த ...பள்ளித்தோழன் குருசாமி... இப்பொழுது, உன் அப்பா பார்த்த அதே குமாஸ்தா வேலையைத்தான் பார்த்துவருகிறேன்" என்றேன்.

இருவரும் மெய்மறந்து இருந்தோம். இருவராலும் பேச முடியவில்லை. இருவரும் அழுதோம். சிரிக்க முயன்றோம் கண்களைத் துடைத்துக்கொண்டோம்.

இரயிலும் வந்து நின்றது. டிக்கட் வாங்கினேன். மீதியிருந்த ஏழு ரூபாய்களை அவனை இறுகக் கட்டிக்கொண்டு விடைபெற்றபோது அவன் பையில் செருகினேன். அவன் அதை கடைசிவரையில் அறிந்துகொள்ளாதது எனக்குப் பெரு மகிழ்ச்சியாயிருந்தது. அவன் துயரின் ஒரு துளியாவது தீருமென்று நினைத்தேன்.

அது உண்மைதானா?

புகைவண்டியில் மேலே உள்ள பலகையில் படுத்துக் கொள்ள, கஷ்டப்பட்டு இடம் பிடித்துத் தந்தான்.

இரயிலும் புறப்பட்டது...

அவன் கதையை நினைத்தேன். எத்தனையோ கதைகளை நானும் படித்திருக்கிறேன். கேட்டிருக்கிறேன்.

ஆனால் அவன் கதையில் காதலில்லை!

சீ! சீ! என்ன முட்டாள்தனமான எண்ணம்! சிதைந்து சீரழிக்கப்பட்ட ஒருவன் வாழ்வில் — கதையில் — காதல் எதிர்பார்க்கிறாயா? —என் உள்ளம் சீறியது!

எரிகிற வீட்டில் சுருட்டுக்கு நெருப்பு கேட்கும் மதிகெட்டவனைவிட உன் நிலை மோசமாகி விட்டதே!—என் மனச்சான்று பேசிற்று. ஆம்! முட்டாள்தனம் தான் என் நினைப்பு!

ஆனால் ஏழைவாழ்வில் காதல் இருக்காதா? அவனுக்கு இன்ப உணர்ச்சியே இல்லாமல் போய் விடுமா? இருக்கத்தான் செய்கிறது.

அதன் விளைவுதான் அவன் மனைவி. இரண்டு குழந்தைகள். அவன் நால்வராகிவிட்டான்.

பாலைக் கண்டறியாத குழந்தை! சுரத்தினால் ஏற்பட்ட வெப்பத்தில் வேகும் மகன்!

அதோ! அவன் புழுங்கிய மனம் புகைகிறது! அது வெடித்தால்.....?

இக் காட்சி மன அலையில் மோதிற்று. 'அக்ரம உலகம்' என்று கத்திக்கொண்டே எழ முயன்றேன். நெற்றியில் 'விண்' என மோதியது மேலிருந்த பலகை, ஆனால் என் சொற்கள் கீழே உட்கார்ந்திருந்த பிரயாணிகள் காதில்

பகுத்தறிவு

அறிவு வளர்க்கும் திங்கள் இதழ்.

ஆசிரியர்: ப. கண்ணன்

மேனாட்டுப் பகுத்தறிவாளரின் கருத்துரைகள், அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் நிறைந்த மாதப் பதிப்பு. தொகுத்து வைத்துப் படித்துணரத்தக்க பயனுள்ள வெளியீடு.

தைத்திங்கள் முதல் நாள், முதல் இதழ் மலர்கின்றது.

தனிப்பிரதி 0 2 0 ஆண்டுக் கட்டணம் 1 8 0

எங்கும் விற்பனையாளர் தேவை.

விவரங்களுக்கு :—

மேலாளர்: பகுத்தறிவு அலுவலகம்,

ADVT. சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

விழுந்திருக்குமா? விழவில்லை. அதிலே ஆச்சரியமுமில்லை!

மக்களின் முன்பு வைக்கப்பட்ட எத்தனையோ உயிர்ப் பிரச்னைகளைக் காது கொடுத்துக் கேட்கக்கூட மறுத்தவர்கள் தாமே இவர்கள்!

ஆனால் என் மண்டையில் பட்ட அடியைக் கண்டு சிரிக்க மட்டும் தவறவில்லை இவர்கள்! சிந்திக்கத் தூண்டிய சிறந்த பல பேச்சாளர்களின் மண்டையை உடைக்கக் கல்வீசிய மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த பிரயாணிகள்தானே இவர்களும்!

* * *

வீடடைந்தேன். ஆனாலும் அந்த நிகழ்ச்சி என்னை வாட்டுவதை விடவில்லை. நான்கைந்து நாட்களாயின. அப்பொழுது தான் மறுபடியும் என் வேலையைச் செய்ய முடிந்தது. மாலையில் வேலைசெய்த களைப்பில் வீடு திரும்பினேன்.

எனக்காக ஓர் கடிதம் காத்துக்கொண்டிருந்தது மேஜையில். அது இதோ!......

அன்புமிக்க தோழ!

நீண்ட காலத்திற்குப் பின் உன்னைச் சந்தித்தது என் ஒடிந்த உள்ளத்திற்கு ஓர் ஆறுதலாக உள்ளது. உன்னை யான் அன்று கண்ட காட்சி, நீ என் மேல் கொண்ட இரக்கம், அதைப் பிரதிபலித்த உன் முகத்தின் பரிவு இவைகளை நான் என்றும் மறக்க முடியாது. இந்தக் கடிதத்தைப் படித்த பின் நீ வருந்தாமல் இருப்பதையே அதற்கு நன்றியாகக் கொள்கிறேன்.

என் ஆருயிர்த்தோழ,

என்மேல் நீ கொண்ட அன்பு உன் குடும்ப நிலையையும் மறந்து ஏழு ரூபாய் நோட்டுக்களை என் பையில் வைக்கச் செய்தது.

இவ்வதிசய உலகத்திலே நீ ஓர் அதிசய உதவி செய்தாய், வாடிய என் வாழ்க்கையில் ஓரளவு இன்பமாவது காண. துவண்ட என் குடும்பம் நிமிர்ந்து நிற்க உதவி செய்தாய்.

தன் தோழன் வாடுவதைக் கண்டு வாளாயிருப்பது அழகல்ல, தன் குடும்பம் நாசமாயினும் நண்பன் குடும்பம் வாடாமல் இருக்க நம்மாலான வழிவகை செய்யவேண்டும் என்று முடிவு செயது, நான் அறியாத நேரத்தில், அந்த ரயிலேறும் கடைசி நேரத்திலும் உதவி செய்ய முடியாவிட்டால் என்ன செய்வதென்று அஞ்சி தன்னலம் பாராமல் ஏழு ரூபாய் அளித்ததை ஏழாயிரம் ரூபாய்களாகக் கொள்கிறேன்.

உனக்கு என் நன்றியும், மனமார்ந்த வணக்கமும் வாழ்த்தும் உரியதாகுக.

மற்றொன்றும் கூறுகிறேன். வருந்தாமல் படி. உனக்கு அந்நிகழ்ச்சியை எழுதினால்தான் என் மனம் சாந்தி அடையும் என்று கருதுகிறேன். ஏனெனில் நீ ஒருவன்தான் எனக்காக இந்தப் பரந்த உலகத்தில் இரக்கப்படுகின்றவன்.

நான் உன்னை ரயிலில் அனுப்பிவிட்டு 'ப்ளாட் பாரத்தில்' வந்துகொண்டிருந்தேன். என் உடையையும் உடலையும் கண்ட ஒரு போலிஸ் "நீ யார்?" என்று கேட்டான். "நானோர் ரிக்ஷாக்காரன்! நண்பர் ஒருவரை ரயிலேற்ற உள்ளே வந்தேன்" என்றேன்.

"ப்ளாட்பாரம் டிக்கட் எங்கே?" என்றான். அதனை நீ என்னிடம் கொடுக்க மறந்துவிட்டது அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. விழித்துக்கொண்டே பையைத் தடவினேன். சந்தேகம் கண்களில் கொப்பளிக்க என்னைப் பார்த்தான். என் பையில் கையை விட்டான், திடீரென்று அந்த போலீஸ். ஏழு ரூபாய் நோட்டுக்கள் வெளிவந்தன.

"ஏது?" என்றான்.

எனக்கும் ஒன்றும் புரியவில்லை. முழித்துக்கொண்டே தடுத்தடுமாறி சொன்னேன்.

"என்....பைக்கு.......எப்படி வந்தது......என்பது தெரியவில்லை.."

கூட்டம் கூடுவதற்குக் கேட்கவேண்டுமா?

அதிலே ஒருவன் மோசடியில் கைதேர்ந்தவன். தன் ஏழு ரூபாயைக் காணோம் என்று அடையாளங்களோடு கூறினான். 'சுரீர்' என்று அறை வீழ்ந்தது. நான், உன்னிடம் சிறையில் இருந்ததோடு கதையை முடித்தேன். உண்மைதான்! அது இன்னும் முடியவில்லை. என்னுடைய சிறை வாழ்க்கை ஒரு தொடர்கதைபோலும். நீ வருந்தாமலிருப்பதே எனக்கு நீ செய்யும் மாபெரும் உதவியாகும்.

உன் ஆருயிர்த்தோழன்

இராமசாமி

* * *

கடிதம் கீழே வீழ்ந்தது.

"என்ன கடிதம்?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் என் மனைவி, குழந்தைகளுடன்! ஆனால் அவன் மனைவி மக்கள்.... ....??? என்ன ஆனார்களோ? எங்கே இருக்கிறார்களோ?

சுய மரியாதைத் திருமணம்

சென்னை மாவட்ட தி. மு. க உறுப்பினர் தோழர் தா. சிதம்பரநாதன் — தோழியர் எல். விசாலாட்சி இவர்களின் வாழ்க்கை ஒப்பந்தம் 4-12-50 திங்கள் காலை 9-மணி அளவில், நாஞ்சில் நாடு கோட்டாற்றில் நடைபெறும்.

★ வறுமை வாட்டி வதைக்கிறது! பட்டினி பார்த்துப் பரிகசிக்கிறது! ★

நனைந்து காய்ந்த கன்னத்தை மேலும் நனைக்கும் கண்ணீர்த் துளிகள்!

பட்டணமாகிறது வடநாடு! டிக் காடாகிறது தென்னாடு!

வடநாட்டோடு இணைந்திரு…ல் வந்துமுண்ட விபரீதம்!

கைத்தறி உ… காந்தளிப்பு!

"தறிக்குழியிலே கால், கைகளில் நாடா, முகத்திலே பெருமூச்சு, கன்னங்களிலே காய்ந்து வடிந்துபோன கண்ணீர், உள்ளத்திலே வேதனையின் விம்மல், எதிரே, 'என்னை நம்பினாயே தோழா—உனக்கு வாழ்வு ஏது?' என்று எள்ளி நகையாடுவது போலத் தாழ்ந்து கிடக்கும் கைத்தறி, அதன் பக்கத்தே, 'நான் சுழல்வது போலத் தானப்பா உன் வாழ்வும் துன்பக் கேணியில் சுழல்கிறது' என்பதை அவனுக்கு உணர்த்துவதற்காகவே உருவாக்கப்பட்டது போன்ற திரிவட்டம், அதன் முன்னே அதை ஏந்திய வண்ணம் கண்ணீரும் கம்பலையுமாக வீற்றிருக்கும் ஏந்திழை, அந்த சோக பிம்பத்தின் அருகே, சொர்ண விக்கிரகம் போல் பிறந்து வறுமை வாணலில் வதக்கப்பட்ட காரணத்தால் வறுத்த மீன் குஞ்சு போலத் தோற்றமளிக்கும் சிறு குழந்தை, குழந்தையின் வாயிலே அம்மா—பசி—பசி என்ற வேதனைச் சொற்கள், அதன் கையிலோ காலித் தார்கள் இரண்டு!

"இந்த உள்ளம் உருக்கும் வேதனைக் காட்சியைக் காணும் அவன் கண்கள் குளமாகின்றன; முன்னமே நனைந்து காய்ந்துபோன கன்னத்தை மேலும் நனைக்கின்றன கண்ணீர்த் துளிகள்; சிறு குழந்தை போல விம்முகிறான் சில விநாடி; பிறகு, தன் செயலை எண்ணி தானே வெட்கப்படுகிறான்; ஒரு ஓட்டு ஓட்டுகிறான் தறியில், மறுபடியும் கை ஓய்ந்துவிடுகிறது—வேலை செய்ய மறுக்கிறது—செய்து என்ன பலன் என்று கேட்கிறது உள்ளம்; இதுதான் பலன் என்று கூறுவது போலக் கண்ணிலிருந்து இரண்டு சொட்டு நீர் காத்திலே விழுகிறது!

"அவன் அந்த நீர்த்துளிகளைப் பார்க்கிறான்; அதிலே அவனுடைய இருண்ட எதிர்காலம் நிழலாடுகிறது; கண்டு நடுங்குகிறான்; அவன் உடல் நடுங்கும்போது அவனுடைய வாழ்க்கைப் பாதையே நடுங்குவதுபோல அவனுக்குத் தோன்றுகிறது; நீண்ட பெருமூச்சு விடுகிறான். இந்தப் பெருமூச்சா அத்தான் நம் வாழ்க்கையின் முடிவு என்று அவனுடைய ஆசை மனைவி அவனைப் பார்த்துக்கேட்கவில்லை. ஆனால், அவள் அவனைப் பார்க்கிற பார்வை! அந்தப் பார்வைக்குப் பேச வாயுண்டானால் அதைத்தான் கேட்கும்!

"தென்னாட்டிலே உள்ள இலட்சக்கணக்கான நெசவாளர் குடும்பங்களிலே இன்று காணப்படும் சோக சித்திரம் இது. வறுமை அவர்களை வாட்டுகிறது. பட்டினி அவர்களைப் பார்த்துப் பரிகசிக்கிறது. பாரம்பரை பாரம்பரையாக அவர்கள் 'வாழ்க்கைக்கு ஒரு வழி வகுத்துக் கொடுத்து வந்திருக்கும் அந்தத் தொழில்—ஆம், அந்த நெசவுத் தொழில், இப்போது, அவர்களை, வேதனை எனும் தோணியில் ஏற்றிச்சென்று, பட்டினிச்சாவு எனும் பாறையில் மோதுண்டு சுக்குநூறாகிச் சிதையும்படிச் "சித்திரவதை" செய்கிறது.

"அவர்கள் கண்ணீர் சிந்துகிறார்கள் — ஏன் என்று கேட்பாரில்லை! அவர்கள், வேதனைக் குரலாலே விம்மி விம்மி அழுகிறார்கள்—ஆறுதல் கூறவோ அன்புமொழிபகரவோ ஒருவருமில்லை! அவர்களுடைய உள்ளத்திலே துன்பப் புயல் வீசுகிறது—அந்தப் புயலை அடக்கி அங்கு ஆநந்தத் தென்றல் வீசுதற்குரிய வழிகளைத் தேடவேண்டுமே, இல்லையேல் அவர்களுடைய வாழ்வு வறண்டு போகுமே என்ற கவலை, கனிவு, இரக்கம், பரிதாபம், மனிதாபிமானம் எவருக்கும் தோன்றவில்லை. அவர்கள் அழுகிறார்கள்—மறுபடியும் மறுபடியும், அந்தக் கண்ணீர் யாராலும் துடைக்கப்படவில்லை. அது தானே வடிந்து காய்ந்து கன்னங்களைக் கறையாக்கிக்கொண்டிருக்கிறது! இந்நிலையில் அவர்கள் உள்ளம் எவ்வளவு வேதனைப்படும்—யார் சிந்தித்தார்கள் அதை?

"பசியால் வாடும் குழந்தை தன் அருமைத் தாயைப் பார்க்கிறது; தாயோ, தன் கணவன் முகத்தைப் பார்க்கிறாள்; அவனோ, அந்தத் தறியைப் பார்க்கிறான்; தறியோ சென்னை சர்க்காரைப் பார்க்கிறது—அவர்கள்தான் என்ன செய்வார்கள் பாவம், அவர்கள் 'டில்லி'யைப் பார்க்கிறார்கள்; 'டில்லி'யோ குனிந்து தரையையோ அங்குள்ள மக்களையோ பார்ப்பதில்லை, ஆகாயத்தைப் பார்க்கிறது; அங்கே வடநாட்டு வணிக வேந்தர்களின் பஞ்சாலைகளிலிருந்து சுருண்டு சுருண்டு எழும் புகை தெரிகிறது, அந்தப் புகை குறையாமல் இருந்தால் சரி—மில்கள் வளர்ந்தால் சரி என்று முழுத் திருப்தி அடைகிறது அந்த "நம்ம சர்க்கார்"! இந்த நிலையில், ஏழை நெசவாளர்களின் உள்ளத்திலிருந்து எழும் பசியால் அலறித் துடிக்கும் பச்சைப் பிள்ளைகளின் சிறுகுரல் அந்த 'டில்லி' ஆளவந்தார்களின் செவிகளில் ஏன் விழப்போகிறது? பிர்லாக்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை டெலிபோன் மூலம் ஓயாமல் கேட்டுத் தீர வேண்டிய மகத்தான தேசோத் தாரகப் பணியில் அல்லவா ஈடுபட்டிருக்கிறார்கள்? அவர்கள் செவியிலா இந்த ஏழைப் பாட்டாளிகளின் வேதனைக் குரல் விழப்போகிறது?"

* * * *

மேலே பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களைத் தீட்டியது வேறு யாருமல்ல-நாம்தான்—"போர்வாள்" ஏடுதான். ஆனால் தீட்டியது யார் என்பது அல்ல இங்கே கவனிக்கப்படவேண்டியபிரச்சினை. தீட்டப்பட்டது எப்போது என்பதுதான்.

மேலே தரப்பட்டுள்ள வேதனை மொழிகள் நம் உள்ளத்திலிருந்து துள்ளியெழுந்து குதித்தோடி வந்து, பொதுமக்கள் மன்றத்தின்முன் நின்று, தங்கள் கண்ணீர்த் துளிகளைச் சிந்திய நேரம்—டிசம்பர் 1948.

இப்போது நடப்பது, டிசம்பர் 1950.

சரியாக இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன நாம் அந்த வாசகங்களை நாடாளவந்துள்ள நல்லறிவாளாகள் முன் நிறுத்தி!

திட்டவட்டமாக இருபத்திநான்கு மாதங்கள் உருண்டோடி மறைந்துவிட்டன நெசவாளர் நிலையைப் பற்றிய பரிதாபச் சித்திரத்தை நாம் நாட்டு மக்கள்தம் நெஞ்சமாளிகையில் கொண்டுவந்து நிறுத்தி.

ஒன்றல்ல இரண்டல்ல, 780 நாட்கள் எப்படியோ பறந்துவிட்டன பரிதாபத்திற்குரிய அப்பாட்டாளிகளின் நிலைபற்றிய கட்டுரையை நாம் தீட்டி.

ஆனால், அத் தொழிலாளத் தோழர்களின் வாழ்க்கையை வதைத்துவந்த வேதனைதரும் பிரச்சினைகளோ அன்று இருந்த மேனிக்கு அழிவு இல்லை என்கிறார்களே, அந்த நிலையில்தான் இருக்கின்றன.

அதே வேதனை!
அதே சஞ்சலம்!
அதே துயரம்!
அதே பரிதாபம்!

துளியும் மாற்றமில்லை இரண்டு ஆண்டுகட்குமுன் இருந்த நிலையில்!

துக்கம் சிறிதும் குறையவில்லை.

ஏக்கம் துளியளவும் மாறவில்லை.

இன்பம், இன்றளவும் அவர்கள் வாழ்க்கையைத் தழுவிக் கொள்ள மறுக்கிறது.

சஞ்சலமற்ற, நாளை வாழ்வுக்கு என் செய்வோம் என்ற பாழும் சிந்தனையற்ற, புதுவாழ்வு, இன்றளவும் அவர்களுக்கு எட்டாத பொருளாகத்தான் இருக்கிறது.

இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன—என்றாலும் ஆட்சியாளர்கள், நெசவாளர்கள் சிந்தும் கண்ணீரைத் துடைக்கும் சிறு பணியையும் செய்து முடித்தனரில்லை.

உணவுப் பிரச்சினை எப்படி இரண்டு ஆண்டுகட்கு முன் இருந்ததைவிட இன்று பலமடங்கு கேவலமானதாக ஆகிவிட்டதோ, அப்படித்தான், நெசவாளர் பிரச்சினையும், முன் இருந்ததைவிட இதுபோது மிக மிக அதிகமான வேதனைதரும் விசித்திரப் பொருளாக மாறிவிட்டது! மாறும்படிவிடப்பட்டுவிட்டது 'மண்டல'மான வந்திருக்கும் மாபெருங் காங்கிரஸ் அமைச்சர்களால்!

சென்னைக் கைத்தொழில் அமைச்சர் தோழர் பெருமாள்சாமி ரெட்டியார், சென்ற கிழமை, சென்னை சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறார் சென்னை மாகாணத்தில் மொத்தம் ஐந்து லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன என்று

இந்தக் கணக்கு மிக மிகக் குறைவானது என்றே நாம் கருதுகிறோம். உண்மையில், நம் தென்னாட்டில், இதுபோது அமைந்திருக்கும் கைத்தறிகள், அமைச்சர் அளித்துள்ள எண்ணிக்கையைவிட மிக மிக அதிகமாகவே இருக்கும்.

இந்தக் கணக்கை உண்மை என்றே வைத்துக் கொண்டு, ஒரு தறியை நம்பி வாழ்பவர்கள் ஐந்துபேர்தான் என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் கூட இந்த ஐந்து லட்சம் தறிகளை நம்பி வாழ்பவர்கள் தொகை 25 லட்சம் ஆகிறது.

இந்த இருபத்தைந்து இலட்சம்மக்கள், "இத்தொழிலில் இன்பவாழ்வு கிடைக்கும்வரை இதனை மேற்கொள்வோம். இன்பம் குறைந்து, துன்பம், இத்தொழிலின் துணைவனாக மாறினால், இதனை விடுத்து வேறு தொழில் புரிவோம்" என்று எண்ணி. இத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அல்ல! பரம்பரை பரம்பரையாக இ

தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்! நூற்றாண்டு நூற்றாண்டுகளாக இத் தொழிலிலேயே பிறந்து, இத் தொழிலிலேயே, வளர்ந்து, இத்தொழிலிலேயே மறைபவர்கள். இந்தத் தொழில் ஒன்றைத் தவிர வேறு எந்தத் தொழில் புரியவும் பயிற்சியோ பழக்கமோ பெறாதவர்கள். அவர்களுடைய சமுதாய அமைப்பே, வாழ்க்கை முறையே, குடும்பக் கட்டுக் கோப்பே இந்தத் தொழில் புரிவதற்கு ஏற்ற முறையில்தான் அமைந்திருக்கின்றன.

அவர்கள் வாழ்வர்—இத் தொழில் வாழ்ந்தால்!

அவர்கள் வீழ்வர்—இத் தொழில் வீழ்ந்தால்!

அவர்கள் வேறு, இத் தொழில் வேறு என்பது அன்று, நிலைமை! அவர்கள்தான் நெசவுத் தொழில்—நெசவுத் தொழில்தான் அவர்கள்!—இது, இன்றைய நிலை. இன்றைய நிலை மட்டுமன்று, நெடுங்காலமாக இருந்துவரும் நிலை!

நெசவுத் தொழில்தான் அவர்களுடைய இல்லத்துத் திருவிளக்கு.

நெசவுத் தொழில்தான், அவர்களுக்கு வாழ்க்கை வழி, இருதய கீதம், இலட்சியப் பாதை, இன்பபுரிப் பயணம்—எல்லாம்!

நெசவுத் தொழில் நலிவின்றி இருந்தால்தான் அவர்கள் வாழ்வில், அமைதி, அரசோச்சும்; இன்பம் எனும் எழில்மொழியாள் இன்னிசை இசைப்பாள்.

நெசவுத் தொழில் நைந்து சிதைந்தாலும், நொறுங்கிச் சிதறினாலும், வீழ்ந்து மறைந்தாலும், வேதனையால் நிறைந்தாலும், அவர்கள் அத் தொழிலைவிடுத்து வேறு தொழில் புகமாட்டார்கள்—புக முடியாது—புகுவதற்குத் தேவையான பயிற்சியோ, மனப் பக்குவமோ, துணிவோ, அவர்களுக்குக் கிடையாது.

இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் இருப்பவர்கள் அவர்கள்! அவர்கள் தொகை 25 லட்சம்!

அவர்கள் நிலை! அவர்கள் தொகை! இந்த இரண்டையும் கவனத்தில் இருத்திக் கொண்டு, பிரச்சினையைக் கவனிக்கவேண்டும். அப்போதுதான் பிரச்சினை, எவ்வளவு பிரமாண்டமானது என்பது நமக்கு புரியும்.

"இருபத்தைந்து இலட்சம் பேர் அவர்கள், நெசவுத் தொழில் தவிர வேறு தொழிலிற் புகமுடியாதவர்கள்! அந்தத் தொழில், இப்போது, வேதனைக்கூடமாக உருமாறியிருக்கிறது"—இப்படிச் சொன்னாலே போதும். இந்த நிலை, நாடாளும் 'நல்லதம்பி'கட்கு மகத்தான அவமானம் தருவது என்பதை மட்டுமல்ல, நாட்டின் அமைதிக்குப் பேராபத்து தரக்கூடியது என்பதையும் நல்லறிவாளர்கள் எவரும் நிச்சயம் ஒப்புக்கொள்வர்.

நாட்டுமக்களிலே இருபதில்ஒரு பகுதியினரைப் பட்டினிப் பட்டாளமாக உலவவிடுவது நாட்டுக்கு நல்லது என்று எவரும் கூறத் துணியார். எப்படி வந்தது இப்படி ஒரு நிலை என்றுதான் எவரும் கேட்பர்.

எப்படி வந்தது இப்படி ஒரு நிலை?—நமக்குந்தான் காரணம் தெரியவேண்டும்.

குருராயப்பேட்டை—அரக்கோணத்திற்கு அருகில் உள்ள ஒரு சிற்றூர். அந்த ஊர், பெரிதும் நெசவாளர்களாலேயே நிரம்பியிருப்பது அங்குள்ள நெசவாளர்கள் நிலையை, உதாரணமாகக் கொண்டு, பிரச்சினையை அலசிப் பார்ப்போம்.

குருராயப் பேட்டையில், அனைவரும், 20×20 வெள்ளை வேட்டியைத்தான் நெய்கிறார்கள். இந்த வேட்டியை நெய்யும் ஒரு நெசவாளிக்கு மாதம் முப்பது நாளும் வேலை இருக்க வேண்டுமானால், அவனுக்குக் குறைந்தது 100 பொந்து நூல் கிடைத்தாக வேண்டும். ஆனால் இந்த நவம்பர் மாதத்திற்கு, குருராயப்பேட்டை நெசவாளி ஒவ்வொருவருக்கும் ஆட்சியாளர்களால் கொடுக்கப்பட்ட நூல் எவ்வளவு தெரியுமோ? 20 பொந்துகள்!

தேவை—100 பொந்து
கிடைப்பது—20 பொந்து

இந்நிலையிலே, அவன், முப்பது நாட்களும் எப்படி வேலை செய்யமுடியும்? 20 பொந்து நூல், அவனுக்கு, 6 நாட்களுக்குத்தான், வேலை செய்யப் பயன்படும். மிச்சமிருக்கும் 24 நாட்களும் அவன் வேலையில்லா வீணனாகத்தான் இருந்தாக வேண்டும்—வேறு வழியில்லை.

ஆட்சியாளர்கள் அவனுக்கு அளிக்கிற இந்த இருபது பொந்து நூலை வேட்டியாக மாற்றினால், அவனுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியம் எவ்வளவு? கணக்குப் போட்டுப் பார்ப்போம்!

இருபது பொந்து நூல்மீது, ஆறுநாள் உழைப்பு பாய்ச்சப்பட்டால், அந்த நூல், ஏழாவது நாள், **3 மடி வேட்டிகளாக** உருமாறும்.

இந்த 3 மடி வேட்டிகளைத் தயாரிக்க ஒரு நெசவாளிக்கு ஆகும் செலவுகள் என்னென்ன?

1. நூல் விலை. இருபது பொந்து நூல்	17	8	0
2. தோய்ச்சல் கூலி	1	0	0
3. ஓடு கூலி	0	8	0
எனவே, மொத்த செலவு	18	12	0

எனவே, குருராயப்பேட்டையில் உள்ள ஒரு நெசவாளி ரூ. 18-12-0 செலவழித்து, 6 நாள் உழைப்பும் செலவிட்டால்தான் மூன்று மடிவேட்டி உருவாகும். இந்த வேட்டியை, துணிக் கடைக்கு, அவன் விற்கக்கூடிய விலை ரூ. 24-0-0.

விற்கும் விலை	ரூ.	24	0	0
அடக்க விலை	ரூ.	18	12	0
எனவே நிகர லாபம்	ரூ.	5	4	0

ஆட்சியாளர்கள் குருராயப்பேட்டை நெசவாளிக்கு அளிக்கிற 20 பொந்து நூல், அவனுக்கு 6 நாள் வேலைதான் அளிக்கும். அந்த 6 நாள் வேலை, அவனுக்கு அளிக்கக்கூடிய ஊதியம் ஐந்து ரூபாய் நாலணாதான்!

ஐந்து ரூபாய் நாலணா! இதை வைத்துக் கொண்டு ஒரு நெசவாளி எப்படி தன் குடும்பத்தை நடத்த முடியும்?

ஆட்சியாளர்கள், அந்த நெசவாளிக்கு, மாதம் 100 பொந்து நூல் கொடுத்தால், அவனால் அந்த நூலைக் கொண்டு 30 நாளும் வேலை செய்ய முடியும். அப்படிச் செய்தாலுங்கூட அவனுக்கு மாதா மாதம் 26 ரூபாய்தான் ஊதியம் கிடைக்கும். விலைவாசிகள் விஷம்போல ஏறி, வாழ்க்கை தேளாகக் கொட்டுகிற இந்தக் காலத்தில், இருபத்தாறு வெண்பொற்காசுகளை வைத்துக் கொண்டு ஒருவன் குடும்பத்தை நடத்துவது என்பது சிறிதும் இயலாத செயல்.

மாதம் 100 பொந்து நூல் கிடைத்தால்தான் இந்த இருபத்தாறு ரூபாய், ஊதியம் கிடைக்கும்.

ஆனால் இப்போது கிடைப்பதோ 20 பொந்து நூல்தான். எனவே நெசவாளி பெறுகின்ற மாத ஊதியம், ஐந்து ரூபா நாலணாதான்!

ஐந்து ரூபா நாலணா, இந்தக் காலத்தில் நல்லெண்ணெய் வாங்குவதற்குக் கூட போதாது. இந் நிலையில், இத் தொகையை வைத்துக் கொண்டு எப்படித்தான் ஒரு நெசவாளி முப்பது நாட்களை ஓட்ட முடியும்? எனவேதான் பட்டினிப் பட்டாளம் நெசவாளர் வட்டாரந்தோறும் உருவாகியிருக்கிறது.

குருராயப்பேட்டையில் மட்டுமல்ல இந்த வேதனைக் காட்சி, நெசவாளர் வாழ்கின்ற எல்லாப் பகுதிகளிலும் தான்!

வெள்ளை வேட்டி நெய்பவர்களிடையே மட்டுமல்ல, இந்த அவல நிலை, லுங்கி நெய்பவர்களிடையேயும் தான்!

குன்றத்தூர்—ஆட்சியாளர்களின் ஆவேசப் போக்கால விளைந்த துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகத் தமிழ் நாட்டு வரலாற்றில் குடிபுகுந்துவிட்ட ஊர்—இந்த ஊரிலுள்ள நெசவாளிகள் அனைவரும் லுங்கி நெய்பவர்கள்.

இவர்களுக்குமாதம்முழுவதும்வேலை இருக்கவேண்டுமானல் ஆட்சியாளர்களால் கொடுக்கப்படவேண்டிய நூல், மாதத்திற்கு, 72 பொந்து.

ஆனால், அக்டோபர் மாதம், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நூல் எவ்வளவு தெரியுமோ?—2½ பொந்து!

இந்த இரண்டரை பொந்து நூல், குன்றத்தூர் நெசவாளிக்கு, ஒரே ஒரு நாளைக்குத்தான் வேலை செய்யப் பயன்படும். அந்த ஒரு நாள வேலையால் அவனுக்கு எப்படிப் பார்த்தாலும், இரண்டு ரூபாய்க்கு மேல் ஊதியம் கிடைக்கமுடியாது.

நெசவாளர்கள் தம் வாழ்க்கையிலே, துக்கம், தாங்கமுடியாத அளவுக்குக்குடிகொண்டிருப்பதற்குக் காரணங்கள் பல இருந்தாலும், இப்போது, அவர்களுடையவாழ்க்கையிலே, அவலநிலை உருவாகியிருப்பதற்கான முக்கிய காரணம், நூல், தேவையான அளவு கிடைக்காததுதான்!

சென்னை கைத்தொழில் அமைச்சர் தோழர் பெருமாள்சாமி ரெட்டியார் அவர்களே இந்த உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் சென்ற கிழமை சென்னை சட்டசபையில் நெசவுத் தொழில் நிலையைப் பற்றிய ஒரு கேள்விக்கு விடை அளிக்கிறபோது, சென்னை மாகாணத்திற்கு மாதாமாதம் தேவைப்படுகிற நூல், 29,000 பேல் என்றும், ஆனால், சென்ற ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டெம்பர் ஆகிய நான்கு மாதங்களிலும் முறையே 18,830—23,569—18,675—17,324 பேல்கள்தான் கிடைத்திருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை மாகாணத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்கட்கு அவர்களின் தேவையைவிட மிகவும் குறைவான அளவு நூல்தான் கிடைக்கிறது — அமைச்சர் பெருமாள்சாமியாரே ஒப்புக்கொள்கிறார் — ஒப்புக்கொள்வதுமட்டுமா—அதற்கான புள்ளி விவரங்களையும் அழகுறத் தந்திருக்கிறார்.

தேவையை விடக் குறைவாகக் கிடைக்கிறதே நூல்—ஏன்? தேவையான அளவு நூல் உற்பத்தியாகவில்லையா சென்னை மாகாணத்தில்? இல்லை—அப்படிச் சொல்வதற்கில்லை—அமைச்சர் பெருமாள்சாமியார் சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறார், நம் தேவையை விட அதிகமாகவே சென்னை மாகாணத்தில், நூல், உற்பத்தியாகிறதென்று!

உற்பத்தி—தேவையைவிட மிக அதிகம்! ஆனால், கிடைப்பது—தேவையைவிட மிகக் குறைவு! விசித்திரம் விசித்திரம் என்பீர்கள் நீங்கள்! ஆமாம், விசித்திரமான நிலை தான்! விசித்திரமான நிலைமட்டுமல்ல—விபரீதமான நிலைகூட!

இதோ பாருங்கள் அமைச்சர் பெருமாள்சாமியார் தந்துள்ள புள்ளி விவரங்களை!

மாதத்தின் பெயர்	உற்பத்தியாகும் நூல் அளவு.	தேவையான நூல் அளவு.	கிடைக்கும் நூல் அளவு.
	பேல்கள்	பேல்கள்	பேல்கள்
ஜூன்	39,642	29,000	18,8 0
ஜூலை	46,043	29,000	2[illegible],569
ஆகஸ்ட்	43,417	29,000	18,675

ஒவ்வொரு மாதத்திலேயும், சென்னை மாகாணத்திற்குத் தேவைப்படும் நூலைவிட, உற்பத்தியாகும் நூல் அதிகமாக இருக்க, நமக்குக் கிடைக்கும் நூல் தேவையைவிடக் குறைவாக இருக்கிறதே—என்ன காரணம் இதற்கு?

இதோ, அமைச்சர் பெருமாள் சாமியார் பேசுகிறார்—காது கொடுத்துக் கேளுங்கள்:—

"நம்மாகாணத்தில் உற்பத்தியாகும் நூல், நம் மாகாணத்திற்குத் தேவைப் படும் நூலைவிட, அதிகமாகவே இருக்கிறது. என்றாலும் நமக்குப் போதுமான அளவு நூல் கிடைக்காமல் இருக்கிறது.

"இப்படி இருப்பதற்குக் காரணம், இங்கு உற்பத்தியாகும் நூல், டில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து, டில்லி சர்க்காரால், நூல், அகில இந்தியாவுக்கும் விநியோகிக்கப் படுகிறது.

"அப்படி விநியோகிக்கும்போது, டில்லி சர்க்கார், ஒவ்வொருமாகாணத்திற்கும் இவ்வளவுதான் கோட்டா என்று நூலை அளந்து ஒதுக்குகிறார்கள்.

"அப்படி அளந்து ஒதுக்கும்போது, நம் மாகாணத்திற்கென்று அவர்களால் ஒதுக்கப்படும் நூல், நம்முடைய தேவையைவிட மிகவும் குறைவாக இருக்கிறது. இதுதான் நம் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நூல் பஞ்சத்திற்கான காரணம்."

காரணம் தெரிந்து கொண்டீர்களா தோழர்களே! நூல் இலாகா; டில்லி தேவதைகளிடம் சிக்கிக்கொண்டிருக்கிறது! எனவேதான் நம் மாகாணத்தின் நூல் உற்பத்தி நம் தேவையைவிட அதிகமாக இருந்தும், நமக்குக் கிடைக்கும் நூல், நம் தேவையைவிடக் குறைவாக இருக்கிறது.

டில்லி, நம் நூலைக் கைப்பற்றி, அதிற் பெரும்பகுதியை வடநாட்டுப் பருத்தி மில்களுக்கு விற்றுவிடுகிறது. விற்றதுபோக, மிச்சமிருக்கும் சிறு பகுதியையே நமக்குத் தருகிறது. அது நமக்குப் போதவில்லை, நம் கைத்தறி நெசவாளர்கள் இருபத்தைந்து லட்சம்பேர் பட்டினி கிடக்கிறார்கள்!

வடநாட்டு மில் முதலாளிகள் வாழ, நம் நாட்டு நெசவுத் தொழிலாளர்கள் வதைகிறார்கள்!

அவர்களுடைய இலாபக கோட்டை வளர, இவர்களுடைய குடும்ப வாழ்வு தேய்கிறது!

ஆமதாபாத்தும் அகமதாபாத்தும் ஆனந்த பவனங்களாக ஆக, குன்றத்தூரும் குருராயப் பேட்டையும் குப்பைமேடாக ஆகின்றன.

தென்னாடு, 'அரசியல் திட்டம்' என்னும் அடிமைச் சங்கிலி கொண்டு வடநாட்டோடு இழுத்துப் பிணைக்கப்பட்டிருக்கிறது, எனவேதான் தன் தேவையை விட மிக அதிகமாக நூல் உற்பத்தி செய்தும், தன் நெசவாளர்கட்குத் தேவையான அளவு நூல் கொடுக்க முடியாமல் தேங்கித் தவிக்கிறது தென்னாடு,

தென்னாட்டிலே உற்பத்தியாகும் நூலை தென்னாட்டு நெசவாளிகட்குக் கொடுத்துவிட்டு, மிச்சமிருந்தால் நூல், அதனை, வடநாட்டிற்கோ பிறநாடுகட்கோ ஏற்றுமதி செய்யலாம்—தவறில்லை—அது நியாயமுங்கூட! பொருளாதார பாலபாடமும் அதுதான்!

ஆனால் இப்போது நடப்பதோ அது அல்ல! தென்னாட்டு நூல் தென்னாட்டு நெசவாளிக்குத் தரப்படாமல் வடநாட்டு மில் முதலாளிக்குத் தரப்படுகிறது! அதன் விளைவாக, தென்னாட்டிலே, பட்டினிப் பட்டாளங்கள் திரட்டுக் உருவாகின்றன! வடநாட்டிலோ, மில்கள், வேகவேகமாக வேலைசெய்கின்றன-தென்னாட்டு நூலை மூலப் பொருளாகக்கொண்டு!

தென்னாட்டு நெசவாளி நூல்பஞ்சம் காரணமாக வேலையில்லாமல் தவிக்கிறான். அப்படி அவன் வேலை செய்யமுடியாமற் போய்விட்ட காரணத்தால், தென்னாட்டிலே துணி உற்பத்தி, வெகுவாகக் குறைந்து, துணிப்பஞ்சம் ஏற்பட்டுவிடுகிறது. இந்த நேரமாகப் பார்த்து, வடநாடு, நம் நூலைக் கொண்டு தன் மில்களிலே உற்பத்தி செய்த ஆடைகளை, நம நாட்டின்மீதே கொண்டு வந்து திணிக்கிறது. இந்தவிதமாக, தென்னாடு, வடநாட்டுத் துணிகளுக்குரிய மார்க்கெட்டாக ஆக்கப்பட்டிருக்கிறது.

நம் நூல் நம்மிடமே இருந்தால், நம் நெசவாளர்கள் அந் நூலை ஆடையாக்கி நமக்குத் தருவர். நம் ஆடைக்கென்று நாம் செலவிடும் நம் பணம் நம் நாட்டு நெசவாளிகட்கே போகும். இவ்விதமாக நம் பணம் நம் நாட்டிலேயே உலவும். வடநாடோ பிற நாடுகளோ நம்மைச் சுரண்டி வாழ இடமிராது.

ஆனால் இப்போது நடப்பது யாது? நம் நூல் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு வடநாட்டுமில்களுக்குத்தரப்படுகிறது. சில நாள் சென்று, வடநாட்டு ஆடைகள் நம் மீது சுமத்தப்பட்டு, நம் பணம் வடநாட்டிற்கு எடுத்துச் செல்லப் படுகிறது.

எனவே இப்போது தென்னாட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ள நூல் பஞ்சம், தென்னாட்டை, வடநாடு சுரண்டுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள மிகத் தந்திரமானதோர் சூழ்ச்சிப் பொறி. இன்றைய அரசியல் நிலைமையைக் கூர்ந்து கவனிக்கும் நல்லறிவாளர் எவருக்கும் எளிதிற் புலனாகக் கூடிய உண்மை இது.

தென்னாட்டிலே உற்பத்தியாகும் நூலிலிருந்து தென்னாட்டுக்குத் தேவையானதை இங்கேயே வைத்துவிட்டு மிச்சமுள்ளதைத்தான் வடநாட்டிற்குக் கொண்டு செல்லவேண்டுமென்று, சென்னை ஆட்சியாளர்கள் டில்லி ஆளவந்தார்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்களாம்! அந்த வேண்டுகோளுக்கு இதுவரை பதிலே கிடைக்கவில்லையாம்! அமைச்சர் பெருமாள் சாமியார் அறிவித்திருக்கிறார் இவ்வுண்மையை!

கிடைக்கத்தான் செய்யாது பதில்! அப்படியே கிடைத்தாலும், அந்தப் பதில், "ஆஹா அதற்கென்ன, அப்படியே ஆகட்டும்!" என்ற விதமாக இருக்காது. "இந்தியா ஒரே நாடு! நூல், எந்தப் பகுதியில் உற்பத்தியானாலும் அது எல்லாப் பகுதியினருக்கும்தான் சொந்தம்! எனவே தென்னாட்டு நூலைத் தென்னாட்டினருக்குக் கொடுத்துவிட்டு மிச்சமிருந்தால்தான் வடநாட்டிற்குக் கொண்டு செல்லவேண்டும் என்ற தங்கள் கோரிக்கை விஷமத்தனமானது" என்ற விதமாகத்தான் இருக்கும்.

* * *

சென்ற பல ஆண்டுகளாகக் கடுமையானதோர் உணவுப் பஞ்சத்தில் சிக்கித் தவிக்கிறது தென்னாடு! காரணம், வெளிநாடுகளிலிருந்து உணவை இறக்குமதி செய்துகொள்ளும் உரிமை தென்னாட்டாரிடமில்லை. அது வட இந்திய ஆட்சியாளரிடமிருக்கிறது.

அதுபோலவேதான், இதுபோது, தென்னாட்டு நெசவாளர்கள் நூல்பஞ்சம் என்ற சம்மட்டி அடியால் தாக்குண்டு நிலைகலங்கிப்போய் இருக்கிறார்கள், இதற்குக் காரணம், நூல் இலாகா, டில்லி தேவதைகளின் கரத்தில் சிக்கிக் கொண்டிருப்பதுதான்.

* * *

நூல் பஞ்சம், உணவுப் பஞ்சம்—இரண்டிற்குமே ஒரே ஒரு பரிகாரம்தான் இருக்கிறது. அந்தப் பரிகாரம்தான் தென்னாட்டைக் கவ்விக்கொண்டுள்ள வேறு பல எண்ணற்ற கொடுமைகளுக்கும் தக்க மாற்று மருந்தாகும்.

திராவிட நாடு திராவிடருக்காகவேண்டும் — ஆம் அதுதான் அந்தப் பரிகாரம்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு

———(:)———

29—12—50, 30—12—50 வெள்ளி, சனி, தேதிகளில் நடைபெறும்

தலைவர் **இரெ. இளம்வழுதி** பி.ஏ.,(ஆனர்ஸ்)பி.எல். துவக்குபவர் **என். எஸ். இளங்கோ**

சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், இன்னும்
இயக்கத் தோழர்கள் பலரும் கலந்துகொள்வர்.

வரவேற்புக் குழுத் தலைவர் :—**வி. எம். ஜான்**

துணைச்செயலாளர்கள் :—**எஸ். வன்னியப்பெருமாள், பி. ஆறுமுகம்.**

செயலாளர் :—**ஏ. ராமசுவாமி M. C.** பொருளாளர் :—**ஏ. குமாரவேல்**

விளம்பர உறுப்பினர்கள் :—**கே. மனோகரன், வி. சுப்பிரமணியம் எஸ். சுப்பிரமணியம்.**

எங்கெங்கும் அலைமோதுகிறது இனஎழுச்சி ஆர்வம்!

———*———

பட்டி தொட்டிகளிலும் பகுத்தறிவுப் பரணி!

——X——

இன்பத் திராவிடத்தின் இதயகீதமாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறப்போர் முழக்கம் பரவாத இடமில்லை. அதன் வீரமுரசு கொட்டப்படாத வட்டாரமில்லை. கழகக் கூட்டங்கள், தினம் தினம், திக்கெட்டிலும் நடந்தபடி உள்ளன. இனஎழுச்சி அரும்பணி நாடெங்கும் முகிழ்த்தபடி இருக்கிறது. இந்த உண்மைகளை விளக்கும் சான்றுகள் சில கீழே தரப் பட்டுள்ளன.

கோலார் தங்கவயல்

12-11-50-ல் இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகக் கூட்டம் கழக மனையில் நடைபெற்றது. அதுபோது சென்னை சர்க்காரின் குன்றத்தூர் கொடுமை குறித்துக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தை விளக்கி கழகச் செயலாளர் T. K. சின்னதுரை சொற்பொழிவாற்றியபின், டிசம்பர் 10-ந்தேதி ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம்
பன்னுங்கொம்பு கிளை

3-11-50 மாலை 6-மணிக்கு தி.மு.க. பன்னுங்கொம்பு கிளைக் கழகக் கூட்டம் கூடி, 24—10—50-ல் சென்னையில் நடந்த தடியடிப் பிரயோகத்தை முன்னிட்டும், 26-10-50-ல் குன்றத்தூரில் 144 தடை யுத்தரவை மீறிக் கூட்டம் நடத்த முயன்றதற்குத் துப்பாக்கியால் எட்டு ரவுண்டுகள் சுட்டு மூன்று பேரைப் படுகாயப் படுத்தியதை முன்னிட்டும் சென்னை அரசாங்கத்தைக் கண்டித்துத் தீர்மானம் போட்டு, அண்ணா அவர்களின் அறிக்கைப்படி சென்னை முதல் அமைச்சர் குமாரசாமி ராசாவுக்குத் தந்தி கொடுக்கப்பட்டது.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்
சோழவந்தான்

இக் கழகச் செயற்குழுக் கூட்டம் கடந்த 16-11-50 வியாழனன்று தோழர் மா. கந்தசாமி தலைமையின்கீழ் நடைபெற்றது.

அவ் வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(1) மறைந்த பெரியார்கள் சேலம், கல்லூரித் தலைவர், உயர் திரு. இராமசாமி, தமிழ்க் கடல் மறைமலை அடிகளார், சிந்தனைக் களஞ்சியம் பெர்னாட்ஷா ஆகிய இவர்களது மறைவுக்கு இக் கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

(2) இராச கோபாலாச்சாரியார் வருகையின்போதும், குன்றத்தூர் பொதுக்கூட்டத்தின் மீதும் அமைதியாக இருந்த மக்கள் கூட்டத்தின்மீது சட்டத்தை மீறிய தடியடிப் பிரயோகத்தையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும், நடத்தக் காரணமாக இருந்த ஆளவந்தாரை இக் கூட்டம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

(3) சென்னையில் நடைபெற்ற மாநிலமாணவர் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டின் நிகழ்ச்சிகள் யாவற்றையும் இக்கூட்டம் முழு மனதுடன் ஆதரிக்கிறது.

நெல்லிக்குப்பம் தி. மு. கிளை.
(தென்னாற்காடு மாவட்டம்)

30-10-50 அன்று மாலை ஆறு மணிக்கு தோழர் P. பொன்னுசாமி அவர்கள் சிற்றுண்டிசாலையில் தி. மு. க. செயற்குழு கூட்டம் தோழர். P. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் சென்னையிலும், குன்றத்தூரிலும் சர்க்கார் நடத்திய அடக்குமுறைகளைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, கழகத்திற்குப் புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

திராவிட முன்னேற்றக் கழகம்,
வாணியம்பாடி

வாணியம்பாடி வ. ஆ. நவம். 19. ஞாயிறு மாலை 6 மணியளவில் தோழர் முல்லை M, P. சத்தியம் தலைமையில் தி. மு. க. சார்பாக ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது, அதுபோது தோழர். T, A. ஆறுமுகம் தி. மு. க. கொடியை ஏற்றுவித்தார். தோழர்கள். இரா, நெடுஞ்செழியன் M. A, அவர்களும், V, N. தத்தப்பன் அவர்களும் 3-மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தில் 5000 மக்களுக்குமேல் திரளாகக் குழுமியிருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம்
ஆர்க்காடு

4—11—50 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கஸ்தூரி பில்டிங்கில், ஆர்க்காடு தி. மு. கழக இரண்டாம் ஆண்டிற்குத்திரும்பவும் த. பொன்னம்பலம் செயலாளராக வந்ததைப்பற்றி ஒரு பாராட்டுக்கூட்டம் தோழர் R. மணிவண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நடராசன், முனிக்கண்ணு, நாராயணசாமி, செயராமன் (திருப்பத்தூர்) பார்த்தசாரதி, ஜெகதீசன்,

ஞானவேலன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குருராயப் பேட்டையில் இன எழுச்சி முரசு!

25-11-50 சனிக்கிழமை இரவு 7-மணியளவில், வ. ஆ. மாவட்டம் குருராயப் பேட்டையில், அவ்வூர் தி. மு. க. கிளையின் திறப்பு விழாப் பொதுக்கூட்டம், அரக்கோணம் தி. மு. க. பிரபலஸ்தர் தோழர் ஏ. எல். சி. சஞ்சீவி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

அவ்வமயம், பொதட்டூர் பேட்டைத் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் தோழர்கள் இராமலிங்கம், நாகலிங்கம், தோழியர் முத்தம்மாள் உண்ணாமுலையம்மாள் ஆகியோர் முறையே, நல்ல தீர்ப்பு, காலமும் கருத்தும், கடவுள், மதம் அவசியமா என்னும் பொருள்கள் குறித்துத் தெளிவுரை ஆற்றியபிறகு, தோழர்கள் அரக்கோணம் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, சென்னை நகராட்சி உறுப்பினர் வி. முனுசாமி, சென்னை 'போர்வாள்' ஆசிரியர் மா. இளஞ்செழியன் ஆகியோர், நெசவாளர் துயரம், அரசியல் நிலை, சமுதாய அமைப்பு முதலிய பல பொருள்கள் குறித்து நீண்ட சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்திற்கு உள்ளூரிலிருந்தும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்து குழுமியிருந்தனர்.

குருராயப்பேட்டை தி. மு. க. கிளையின் செயற் குழு பின் கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. செயலாளர்:— கு. சி. இராமசாமி — துணைச்செயலாளர்: மொ. ச. கோபாலன். பொருள் உறுப்பினர்: கு. சிவானந்தன். வி. உறுப்பினர் :— பா. கோ. குப்புசாமி. குழுஉறுப்பினர்:—கெ. ச. நாகரத்தினம், மி. செ. முருகேசன், அ. மு. ஏழுமலை, மு. சண்முகம், கேசவப் பணிக்கர், த. முனிசாமி, கொ. த. சுப்பிரமணியன்.

திருச்சுழி.

தி. மு. கிளைக்கழகம்.

இவ் வூரில். 5 - 11 - 50 - இல். தி. மு. கிளைக்கழகம் நிறுவப்பட்டது. அவ்வமயம், மாலை. 6. 30. மணிக்கு அருப்புக்கோட்டை தோழர். சிவ. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இயக்க பொதுக் கூட்டத்தில் அருப்புக்கோட்டை தோழர். எம். எஸ். ராமசாமி, விருதை. தோழர். நா. ராமசாமி ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். சென்னைத் தடிபடி தர்பார், குன்றத்தூர் துப்பாக்கிப்பிரயோகம் பற்றி வன்மையாகக் கண்டித்துத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, தோழர் இரா. சேர்மன் நன்றி கூற, கூட்டம் முடிவடைந்தது.

கொழும்பு தி. மு. க.

19-11-50. மாலை 4-30 மணிக்கு ஆட்டுப்பட்டித்தெருப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் கொழும்பு திராவிட முன்னேற்றக் கழகத்தாரால் வ. உ. சிதம்பரனார் நினைவு தினம் கல்விடைத் தோழர். டி. எம். பீர் முகமது அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிதம்பரனார் செய்த தீரச் செயல்களைக் குறித்துத் தோழர்கள் சு. சண்முகம், எம். எஸ். குலசேகரன், மா. இளஞ்சேரன், பி, டி. லூக்காஸ், ராசமணி, இளவழகன், மற்றும் பலர் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

கட்டக்குளம் தி. மு க. கிளை

18-11-50-ல் கட்டக்குளத்தில் உள்ளூர் தி. மு. க. சார்பில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில், குன்றத்தூர், சென்னை கொடுமைகளைக் கண்டித்து, தோழர்கள் கலைப்பித்தன். S. V. சையது முகமது இருவரும் பேசினார்கள், தடியடிபட்டவர்களுக்கும் சிறையில் இருப்பவர்களுக்கும், பெர்னட்ஷா மறைவுக்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டு, T. K, சாமி நன்றி கூற கூட்டம் முடிந்தது.

சத்திய மங்கலத்தில்!

19-11-50. ஞாயிறு மாலை 6-மணிக்கு "குறள் மன்றம்" மைதானத்தில் தி. மு. க. பொதுக் கூட்டம். G. N. ராஜூ. தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் S. M. பாட்சா அவர்களால் திராவிடப்பண் பாடப்பட்ட பிறகு இன்றைய நிலை குறித்து, N. E. பால குரு, வெங்கடாசலம் ஆகியோர் சொற்பொழி வாற்றினார்கள். S. K. சென்னியப்பன் நன்றி நவில கூட்டம் 9-மணிக்கு முடிவுற்றது.

மருதாடு. தி. மு. க. கிளை

14 – 11 – 50. மாலை இவ்வூர்க் கிளைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை—குன்றத்தூர்—தடியடி துப்பாக்கிப் பிரயோகக் கொடுமைகளை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அவ்வமயம், தோழர்கள் எம். எஸ். அனிபா, ம. பாலு, அ. காத்தவராயன் ஆகியோர் தீர்மானங்களை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

—

பச்சையப்பனில் வ. உ. சி!

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கப்பலோட்டிய தமிழர்-மறைந்த மாவீரர்—வ. உ. சிதம்பரனார் நினைவு நாள் விழா, 21-11-50 செவ்வாய் மாலை 4-30 மணி அளவில், கல்லூரி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது மாணவர்கள் திரளாகக் குழுமியிருந்தனர்

விழாப் பொதுக் கூட்டத்திற்கு, தமிழ் விரிவுரையாளர் புலவர் அன்பு கணபதி அவர்கள் தலைமைதாங்கி, சிதம்பரனார் செய்த புரட்சிகளை இனிது விளக்கினார்.

பிறகு, "போர் வாள்" ஆசிரியர் மா. இளஞ்செழியன் B. A. (Hons,) சிதம்பரனாரின் அரசியல் புரட்சி-சமுதாயச்சீர்திருத்த ஆர்வம்—சாதிமதக் கொடுமைகளை எதிர்த்து நின்றவீரப் பண்பாடு-அரிய இலக்கியத் தொண்டு—ஆராய்ச்சி உள்ளம் ஆகிய பல்வேறு பொருள்களைக் குறித்து விளக்கமாகச் சொற்பொழிவாற்றினார்.

விழாவிற்கு, கல்லூரித் தலைவர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர், கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் மு. வரதராசனார் ஆகியோரும் வந்திருந்து பங்கெடுத்துக் கொண்டது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

தமிழ்ச்சங்கச் செயலாளர் இரா. சண்முகம் நன்றி கூற, விழா, மாலை 6-30 மணிக்கு இனிது முடிவுற்றது

—

தி. மு. கழகம்
புதிய கிளைகள்

அய்யம்பேட்டை (காஞ்சி) :— 15-11-50-ல், இவ்வூர் தி. மு. க. தோழர்கள், தோழர் சே. கோ. பெருமாள் தலைமையில் கூடி, இவ்வூர் தி. மு. க. கிளையை நிறுவினர். அதுபோது, கீழ்க்கண்ட செயல் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். செயலாளர்:—தெ. மாணிக்கவேல். துணைச் செயலாளர்:—சா. தருமலிங்கம். பொருள் உறுப்பினர் :—க. சோமசுந்தரம். விளம்பர உறுப்பினர்:—இர. அர்த்தநாரி.

ஆனைமலையன்பட்டி :— 27-9-50 புதன் கிழமை காலை தோழர் சு. நாகையசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இவ்வூர் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. அவ்வமயம் அமைக்கப்பட்ட செயற்குழு விவரம்:—

செயலாளர்:— ச. நடராசன் துணைச் செயலாளர்:—கு. ஆசீர்வாதம் பொருள் உறுப்பினர்:—கா. நல்காமு. விளம்பர உறுப்பினர்:—தே. நல்ல தம்பி. செயற்குழு உறுப்பினர்கள்:—கோ. சு. சுங்கர்லால், இரா. காந்தி, பெ. நா. இராஜாராம், சு. நாகையசாமி, க. சித்தன், மு. முகமது மைதீன்.

நாகலாபுரம்: [திண்டிவனம் நகர உட் கிளை]:—26-11-50 ஞாயிறு இரவு 8-30 மணிக்கு **நாகலாபுரம்**, திண்டிவனம் நகர உட்கிளை திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் ஆ. தங்கவேலு அவர்கள் தலைமையில் வ. உ சி. செயலகத்தில் கூட்டப்பட்டது. 30-க்கு மேற்பட்ட தோழர்கள் வந்திருந்தார்கள். கீழ்க்கண்டவர்கள் செயற்குழுவினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

1. செயலாளர்— N. தேவநாதன்
2. துணைச் செயலாளர்— R. திவாகராசன்.
3. பொருட்காப்பாளர்— N M. கோபால்.
4. விளம்பர உறுப்பினர்— S. நடராசன்.

இதர உறுப்பினர்கள்

5. R. சதாநந்தம், (6) T. S. பாணி (7) D. லட்சுமண நாராயணன் (8) M. S. முத்து. (9) கெங்காதரன். (10) லட்சுமிபதி. (11) S. P. ராசு.

வள்ளுவர் இலவச வாசகசாலை திறப்பு விழா

19-11-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு சென்னை, மீர்சாபேட்டையில் மேற்படி திறப்பு விழாப் பொதுக் கூட்டம் திரு. கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் அரிய முன்னுரைக்குப் பின் போர்வாள் ஆசிரியர் காஞ்சி. மணிமொழியார் வள்ளுவரும் பகுத்தறிவுக் கொள்கையும்பற்றி நீண்டதொரு சொற்பொழிவாற்றிய பின் வாசக சாலையைத் திறந்து வைத்தார். பின்பு K. A மதியழகன், பி. ஏ. அவர்கள் தற்கால ஆட்சியாளர்களின் அஞ்சத்தக்க — அருவெறுப்பான போக்கைக் கண்டித்துப் பேருரை ஆற்றியபின் நன்றியறிதலுடன் இரவு 9 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சார்! டாக்டர் சார்!' என்று கத்தினோம்.

அங்கே திடீரென்று ஒரு கார் வந்து நின்றது. டாக்டர் இறங்கினார்.

விஷயத்தைச் சொன்னோம். எங்களையும் உடனே காரில் ஏறச் சொன்னார். வாழ்க்கையில் அன்றுதான் மோட்டார் காரில் முதன் முதல் ஏறினோம்! அதுதான் கடைசித் தடவையும்! எங்கள் தலையில் விழப்போகும் பேரிடியையும் மறந்து, மனதில் மட்டற்ற மகிழ்ச்சி பொங்க, காற்றாகப் பறந்துகொண்டிருந்தோம் காரில்!

கார் நின்றது! வீடே இடிந்து விழ்வது போன்ற பேரிடி—அழுகை ஒலி—எங்களை வரவேற்றது.

ஆமாம்! அப்பா எங்களை, இவ்வுலகத்தில் அனாதையாக விட்டுவிட்டுச் சென்றுவிட்டார், ஆண்டாண்டு தோறும் அழுதாலும் மாண்டவர் வரமாட்டார் தான்! ஆனால் எந்த அடைக்குந் தாழ்ப்பாளைப் போட்டாலும் அதையும் மீறிக்கொண்டு வெளி வரும் 'அன்பு' மனித இனத்திற்கு இருக்கிறது என்பதற்கு அடையாளம்தான் என்ன?

அழுகை தானே!

'அப்பா, அப்பா, அப்பா' என்று அழுதோம். அலறினோம், விழுந்து புரண்டோம். ஆனால் இதை அவர் எப்படிக் கேட்கமுடியும்? சாகப்போகும் கடைசி நேரத்தில், 'இராமசாமியை கூப்பிடு' என்றாராம். நான் தான் டாக்டரைக் கூப்பிடப் போயிருந்தேனே!

ஆசிரியரின் முதல் தாக்குதல் என் இடது கண்ணைப் போக்கி உள்ளத்தைத் துடிக்கச் செய்தது. ஆனால் இப்பேரிடிபோ என் உள்ளத்தைச் சுக்கு நூறாக்கி, முழுக் குருடனாகவே ஆக்கிவிட்டது என்னை.

பக்கத்தூரிலே கொஞ்சம் புன் செய் நிலம் சொந்தமாயிருந்தது. அதுதான் அப்பா விட்டுச்சென்ற சொத்து. இந்நிலையில் பள்ளி வாழ்வெங்கே?

வேலைக்காக எங்கெங்கோ அலைந்தேன். தில்லை நடராசனின் திருப்பாதங்களைத் தொழுதேன்.

பல்லாயிரக்கணக் கானபக்தர்கள் வந்து தரிசித்துச்செல்லும் கோடீஸ்வரன் பொன்னம்பலத்தான் திருநடனம் புரிகின்ற தில்லையில் நான் வேலைசெய்து

வாழ வசதியில்லை. என் கதி கிடக்கட்டும்—எங்கள் குடும்பத்தின் கதி? .. .. ..என் தமக்கைகளின் வாழ்வு?

அம்மா அழுதுகொண்டே இருந்தார்கள். 'நம்பினோர்க்கு நடராஜா' என்ற சொற்களை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் பஜித்துக் கொண்டிருந்தார்கள். பாவம்! அவர்களால் வேறு என்னதான் செய்யமுடியும். "நடராஜா, நம்பிய நமக்கு எமராசாவாக அல்லவா இருக்கிறார்" என்பதைப் பல நேரங்களில் என் தமக்கைகள் சொல்லத்தான் செய்தார்கள். புன்செய் நிலம் தந்த பணம் எத்தனை நாட்களுக்குத்தான் வரும்?

அன்று இரவு ஏழு மணியிருக்கும். அடுப்பிலிருந்த பூனை "மியாவ் மியாவ்" என்று இசை மீட்டிக்கொண்டிருந்தது. விளக்கின் சுடர் தன் அந்தியகாலத்தில்கூட, நின்றுவிடாமல், எதிர்க்கும் காற்றோடு போராடிக்கொண்டிருந்தது. பக்கத்து வீடுகளில் கடன் வாங்கவும் முடியவில்லை பலதடவை வாங்கியாகிவிட்டதால். "நீயே துணை புரிவாய்' ஒரு பாட்டு. அப்பா சொல்லித்தந்தது. நான் அதை நினைவிற்குக் கொண்டுவந்து கொண்டிருந்தேன், ஒரு மூலையில் சாய்ந்துகொண்டு. அன்று கோவிலுக்கு எண்ணெய் போடாதது ஞாபகத்திற்கு வந்தது. உடனே அந்தக் கடைசி சொட்டு எண்ணெயையும் எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

'தம்பி!'

'ஏன் அக்கா'

'நான் ஒன்று சொல்லப்போகிறேன்! கோபிக்காதே!''

"நான் ஏன் கோபிக்கிறேன்?"

"இங்கிருக்கும் அகல் விளக்கு, எண்ணெயில்லாமல் அவிகிறது. நீயோ ஆயிரம் விளக்குகள் ஜோதி மயமாக்கும் கோவிலுக்கு மீதி இருக்கும் ஒரு கரண்டி எண்ணெயையும் ஊற்றச் செல்கிறாயே! உன் மூளையையும் கோவிலுக்கே காணிக்கை செலுத்திவிட்டாயா?"

"என்ன அக்கா கோபிக்கிறாயே? கஷ்டம் தீருவதற்குத் தானே எண்ணெய் ஊற்றுகிறோம் தினம். திடீரென்று நிறுத்திவிடலாமா? அதுவும் இன்று வெள்ளிக்கிழமை!"

"இதுவரை ஊற்றிய எண்ணெயால் துளியாவது கஷ்டம் குறைந்ததா?

"இல்லை"

"ஏன்?"

"தெரியாது"

"உனக்கு எதுதான் தெரியும்? தம்பி நான் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறேன். தில்லைத் திருத்தீட்சதரின் திருப்பிரசாதமல்ல அது, நீ வாங்கினவுடன் விழுங்க! பசிக்கிறதே என்று பஜித்துக்கொண்டிருந்தால் பரமன் வரம் அருளமாட்டான். துதிக்கிறேன் யானைமுகத்தவா, கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரப்பா என்றால் பார்க்கமாட்டான். பார்த்ததும கிடையாது."

"திட்டம் என்றாய்! ஏதேதோ சொல்கிறாய்! ஒன்றும் புரியவில்லையே! அக்கா!''

'நான், கமலம், செல்லம் மூவரும் இன்று இரவே சென்னை செல்கிறோம் அநாதை ஆஸ்ரமத்தில் சேர. டிக்கட்டிற்குப் பணம் ஏது என்று கேட்கிறாயா? டிக்கட்டில்லாமல் பிரயாணம் செய்ய முடியும் என்ற தைரியம் எனக்கிருக்கிறது"

"எங்கள் கதி, அக்கா"

"இப்பொழுதிருக்கும் 'அதோகதி'யை விட உயர்ந்த கதிதான்"

* * *

படர்ந்து எரிந்த விளக்கு, நின்று வெகு நேரமாகிவிட்டது. இரு தமக்கைகள், ஒரு தங்கை—மூவரும் மெதுவாக எடுத்து வைக்கும் காலடி சத்தம் அக்கோர அமைதியிடையே கேட்கத்தான் செய்தது. அடக்க முடியாமல் அழுகையை அடக்கிக்கொண்டேன். ஆனால் விம்மிய சத்தம் அம்மாவிற்குக் கேட்டுவிட்டது.

"அழுகிறாயா கண்ணு! பசிக்கிறதா?'' என்று அம்மா கேட்டார்கள். 'தூக்கத்தில் ஏதோ பொருமுகிறான்'—இது அக்காவின் பதில.

தலையணையைக் கண்ணீரால் நனைத்துக்கொண்டே தூங்கிவிட்டேன்.

பெரிய அக்கா, சின்ன அக்கா, தங்கை, மூவரும் வெளியேறிவிட்டனர்!

"அக்காளெல்லாம் எங்கேயடா?' — காலையில் அம்மா அலறிக்கேட்ட முதற் கேள்வி, இதுதான். அழுதேன். நடந்ததைச் சொன்னேன். 'ஓ' வென்ற அம்மாவின் அழுகை ஒலியால் வீடே அதிர்ந்தது.

நாள் முழுதும், சுற்றியலைந்து மாலை திரும்பினேன்.

"கந்தையான உடை. தெருப்புழுதி படிந்து அழுக்கேறிய தலை. வற்றி உலர்ந்துபோன முகம். 'அசல் திருட்டுப்பயல் என்பதைக் காட்டுவதுபோன்ற விழிகள்''.

அங்கிருந்த உடைந்த கண்ணாடியில் என் முகம் பட்டபோது இதைத்தான் சொல்லியது அக்கண்ணாடி!

"தட்டுமுட்டு சாமான்கள் விற்ற பணம் கையில் பத்து ரூபாயிருக்கிறது. உடனே சென்னை செல்லவேண்டும். என் செல்லங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்'' என்று அம்மா துடித்தார்கள். இரயிலடி நோக்கி நடந்தோம்.

* * *

சென்னைவந்தடைந்தது புகைவண்டி. ஒருடிக்கட்தான் வாங்கியிருந்தோம். மீதி பணத்தில் சென்னையில் 'செல்வங்களை'(!) தேடவேண்டுமல்லவா? மீதி பணம் என் பையிலிருந்தது. அம்மாவிடம் 'நீ டிக்கட்டை எடுத்துக் கொண்டு வெளியில் சென்று நில். நான் எப்படியும் தப்பித்து வந்துவிடுகிறேன்' என்றேன்.

"நான் உன்னை எங்கேயடா காண்பது? என்னோடேயே வா. கெஞ்சிக் கூத்தாடியாவது உன்னை வெளியில் கொண்டு போய் விடுகிறேன்" என்றார்கள்.

"இல்லை அம்மா! இந்த இரயில்வே அதிகாரிகள், இருக்கும் பணம் அத்தனையையும் இரக்கமின்றிப் பிடுங்கிக் கொள்வார்கள். அப்படி நான் வெளிவர முடியாவிடில், இந்தப் பணத்தைக்கொடுத்து வந்துவிடுகிறேன் அம்மா" என்றேன்.

* * *

நிலையத்தில் யாரும் இல்லாத இடம் தேடினேன். ஆனால் எங்கும் ஓரிருவர் போய்வந்து கொண்டிருந்தனர். புது ஸ்டேஷன்! ஒன்றும் புரியவில்லை.

அம்மா வெளியில் சென்று வெகு நேரமாகி விட்டது. ஆகவே எப்படியும் தப்பிவிட வேகமாக இரயில்வே இரும்பு வேலியில் ஏறினேன்.

"டேய், டேய், யாரடா அங்கே ஏறுவது? திருட்டுப் பயலே!" என்று சத்தம் போட்டுக்கொண்டு ஒருவன் வேகமாக ஓடிவந்தான். குதித்து ஓடிவிடலாமா என்று நினைத்தேன். அப்படியும் மாட்டிக் கொண்டால் பேராபத்தாயிற்றே என்று நடுநடுங்கிமெதுவாக இறங்கினேன். இறைச்சித் துண்டைச் சுற்றி ஓலமிடும் நாய்க்கூட்டம் போல அங்கே பலர் கூடிவிட்டனர்

"டிக்கட்டில்லாமல் வேலி ஏறிக் குதிக்கிறாயோ?" என்று கேட்டான் டிக்கட் பரிசோதிப்பவன் ஒருவன் என் கையைப் பிடித்துக் கொண்டே.

அம்மா வெளியிலிருப்பதையும், மற்ற உண்மையையும் கூறினேன்.

வெளியே இழுத்து வந்தான் என்னை. அம்மா நாழியாக ஆக என்னைத் தேடிக்கொண்டு எங்குப் போய்விட்டார்களோ தெரியவில்லை. என்னால் அம்மாவைக் கண்டு பிடிக்க முடியவில்லை போலீஸ் புலியின் சந்தேகம் பூர்த்தியடைந்தது!

"திருட்டுப் பயல்! பொய் சொல்கிறான்!" என்று சொல்லிக்கொண்டே என் பையில் கையை விட்டான். ஐந்து ரூபாய் நோட்டும் சில்லறையும் வெளிவந்தன.

பின் அவன் என்னை ஒன்றும் கேட்கவில்லை. காது செவிடுபடும்படி ஒரு அறை என் கன்னத்தில் விழுந்தது. "எங்கே திருடினாய்?"—இந்த ஒரு கேள்வியைத்தான் ஒவ்வொரு அடிக்குப்பின்னாலும் அவன் திருப்பிக் கேட்டான்.

அவனுடைய 'அந்தக் கேள்வி'க்குப் பதில் சொல்ல முடியாமல் சுருண்டு கீழே விழுந்தது என் உடல்.

பெரிய மாநாடு அங்கே கூடிவிட்டது. 'ஏன், நான், முழுதும் உணர்விழுந்து இறக்கவில்லை' என்றுதான், நான் வருந்தினேன். என்றோ, எப்பொழுதோ, எவனாலோ, திருடப் பட்டவர்களெல்லாம் அந்தச் சமயத்தில் தங்கள் ஆத்திரத்தைப் போக்கிக் கொள்ள முன்வந்தனர்.

"திருட்டுப்பயல்! மயக்கமடித்ததுபோல் கீழே விழுந்து கிடக்கிறான்" என்றான் யாரோ ஒருவன். தூக்கி நிறுத்தி தலைமயிரைப் பிடித்துக் கொண்டான் மற்றொருவன். இன்னொருவன், தன் 'பெல்ட்'டின் பலத்தை என் மீது சோதித்துப் பார்க்க ஆரம்பித்தான். பின், என் உடல், நாய்களிடையே மாட்டிய இறைச்சித் துண்டுதான்!

நான் விழித்துப் பார்த்த போது, என் பக்கத்தில், அன்பு மொழிகூறி, ஆறுதல் தரும் என அம்மா இல்லை!

இரும்புக்கம்பிகள் நின்றன!

மனித மிருகங்களின் அரசாங்கம் செய்த கூண்டு!

அம்மா! அம்மா! அம்மா!... ....ஆயிரம் முறை கூறினேன்.

சிறைக் கம்பிகள் திடீரென்று விலகின. உள்ளே நுழைந்தார் இரக்கமென்று ஒரு பொருளிலா அரக்கர் தலைவர்—போலீஸ் இன்ஸ்பெக்டர். டாக்டரும் நுழைந்தார்.

நல்ல வேடிக்கை! வேல்கொண்டு குத்தி உயிரைப் போக்கினார்கள் ஒரு சிறு குற்றத்திற்காக, அந்தக் காலத்தில்! ஆனால் ஈட்டியை உடலில் செருகி, புண்ணாக்கி, பின் மருந்து போடுகின்றனர் இக்காலத்தில்!

சர்க்கார் வைத்தியசாலையில், நானும் ஒரு 'பேஷன்ட்'.

வீட்டுக் கூரை பிய்த்துக்கொண்டு போகிறது; மண்சுவர் வீழ்கிறது புயலினால். இருந்தாலும் ஓர் அமைதி இருக்கிறது புயல் நின்றவுடனே அந்நிலையில்தான் நானும் இருந்தேன்.

ஆனால், தாய், தமக்கைகள் கதி நினைவிற்கு வரும்போது திடீரென்று தாக்கி உயிரைப் போக்கும் மின்னல் போலிருந்தன, அவ்வெண்ணங்கள்.

* * * *

பூட்ஸ் சத்தங்கள். அலைகள் கைதிகளின் அபாயச் சங்குகள்! போலிஸாரின் வருகையின் அறிவிப்பு!

"ஹி இஸ் ஆல் ரைட்! அவன் உடம்பு தேவலாம்" என்றார் டாக்டர், இன்ஸ்பெக்டரிடம்.

(7-ம் பக்கம் பார்க்க)

வேகமாக அச்சாகி வருகிறது! **விரைவில் வெளிவருகிறது!**

திராவிடர் டைரி—1951

திராவிடர் அனைவரும் பெற்றிருக்கவேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு ★ ஒவ்வொரு தி. மு. க. தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு.

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லாவிவரங்களும் அடங்கிய எழில்மிகு ஏடு.

உங்கள் பிரதிக்கு உடனே முந்திக் கொள்ளுங்கள்! ★ சென்ற ஆண்டுபோல கிடைக்கவில்லையே என்று பிறகு வருந்தாதீர்கள்!

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

* அறிஞர் அண்ணாதுரையின் அரிய பொன்மொழிகள்—சென்ற ஆண்டு டைரியில் வெளிவராதவை, சிறந்தவை, புதியவை.

* புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கருத்துக் கருவூலங்கள்.

* வால்டேர், ரூசோ, இங்கர்சால், பெர்னாட்ஷா, எச். ஜி. வெல்ஸ், எமிலி ஜோலா, ஷெல்லி, வால்ட் விட்மன், காரல் மார்க்ஸ், லெனின், தாமஸ் பெயின், தாகூர், மாஜினி, எம். என். ராய், லின் யூடாங், திரு. வி. க., மறைமலையடிகள் முதலான உலகைத் திருத்திய உத்தமர்கள் நூற்றுக்கணக்கானவர்களின் சிந்தனைக் குவியல்கள்.

* தி. மு. கழக முதலாண்டு வளர்ச்சி முழு விவரம்.

* தி. மு. கழக அமைப்பு முறை.

* தி. மு. கழகச் செயற்குழு, பொதுக்குழு, துணைக்குழு விவரங்களும், உறுப்பினர் பெயர்களும்.

* கழகப் பேச்சாளர்கள் பெயரும் முகவரியும்.

* தி. மு. கழகக் கிளைகள் 550-ன் விவரங்களும், அவற்றின் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினர் பெயர்களும்—மாவட்ட வாரியாக.

* தி. மு. மாணவர் கழக விவரங்களும் செயல் உறுப்பினர் பெயர்களும்.

* தி. மு. க. கொடி—இரு நிறத்தில்.

* பொதுச் செயலாளர் அண்ணா புகைப்படம்.

* திராவிடர் கொண்டாடற்குரிய திருநாட்கள்.

* அரசினர் விடுமுறை நாட்கள்.

* தபால் தந்தி கட்டண விவரங்கள், விற்பனை வரி வருமான வரி விவரங்கள், ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன்) கட்டணங்கள், ட்ரங்க் டெலிபோன் கட்டணங்கள் மற்றும் பல இன்றியமையாத குறிப்புகள் நிறைந்துள்ளன.

அழகான அமைப்பு 530 பக்கங்கள் விலை அணா 14

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ 1—0—0-ம், பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—4—0-ம் அனுப்பவேண்டும்.

விற்பனையாளர் கழிவு 20 o/o அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது.

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு
சென்னை 1.

அறிஞர் C. N. அண்ணாதுரை M.A முன்னிலையில்

3-12-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு

நல்லுணர்ச்சி நாடக சபையாரின்

அ. வெ. ரமணி M. நாகூர் ஜி. டி. வசந்தா ஆர். ராஜம் டி, வி. பேபி

மற்றும் பல சிறந்த நடிகர்கள் தோன்றும்

வருங்கால வீரன்

(கதை—வசனம்—பாடல் தோழர் அ. வெ. ரமணி)

வி. பி. ஹாலில் நடைபெறும்

டிக்கட் விவரம்:—ரூ. **3, 2, 1.** (வரியுட்பட)

ADVT. M. S. M. முகைய்தீன் ஆர்கனைசர்.